# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE — அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 03.05.2022 | supeedsam.com | supeedsam@gmail.com







## தேசிய அரசாங்கம் இணக்கத்துடன் தயார்!

# மீண்டும் ஒன்றிணைந்த ஆளும்கட்சி



### ஜனாதிபதி, விமல், கம்மன்பில இணக்கம்

ஆளும் கட்சியும் சுயாதீனமாக செயற்படுவதாக அறிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைப்பது என்ற பொது நிலைப்பாட்டுக்கு வந்துள்ளனர்.

நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர்கள் இந்த நிலைப்பாட்டை எடுத்ததாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த ஜனாதிபதியுடன்

02 ஆம் பக்கத்தில்...

## செங்கலடி களுவன்கேணி கடற்கரையோரப் பகுதியில் சட்டவிரோத வேலைத் திட்டங்கள்





மட்டக்களப்பு செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட களுவன்கேணி கடற்கரையோரப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் காடுகள் அழிக்கப்பட்டு இயற்கை தோனாக்கள் அடைக்கப்பட்டு அங்கு காணப்படும் பழமையான பெறுமதியான மரங்கள் கண்டல் தாவரங்கள்

02 ஆம் பக்கத்தில்...

## மஹிந்த பதவி விலகத் தயார்:

### புதிய பிரதமர் டலஸ்

இடைக்கால அரசாங்கம் தொடர்பாக ஏற்றுக்கொள்ளக் கூடிய திட்டத்தை முன்வைத்தால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகத் தயார் என நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## 6 ஆம் திகதி நாடு முற்றாக முடங்கும் அபாயம்

எதிர்வரும் 6ஆம் திகதி நாடு தழுவிய ஹர்த்தால் முன்னெடுக்கப்படும் என தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நிலையம் தெரிவித்துள்ளது.


அரசு, தனியார் மற்றும் தோட்டத் துறையைச் சேர்ந்த அனைத்துத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவார்கள் என்று அவர்கள் தெரிவித்தனர்.

அதன்படி, அன்றைய தினம் நாடு முழுவதும் உள்ள அனைத்து நகரங்களிலும் கிராமப்புறங்களிலும் உள்ள மக்கள் அரசாங்கத்திற்கு எதிராக வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்துவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## சுபீட்சம் வாசகர்களுக்கு




## பிரதமர் பதவி விலகினாலும் புதிய பிரதமராக போதுஜன ஒருவர் நியமிக்கப்படமாட்டார்



பௌத்த நாயக்கர்களின் அறிவுறுத்தல் படி பிரதமர் பதவி விலகினாலும் புதிய அரசாங்கத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தரப்பில் பிரதமர் ஒருவர் நியமிக்கப்பட மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.

## நாட்டில் இன்று மின் தடை இல்லை

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை கருத்திற்கொண்டு புதிய மின்சார இணைப்புகள் வழங்குவதை குறைத்துள்ளதாக மின்சார சபை அறிவித்துள்ளது.

இதேவேளை, ரம்ழான் தினத்தை முன்னிட்டு இன்று மின்வெட்டு மேற்கொள்ளப்படாது என பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்றும் நாளையும் வழமைபோல் மின்வெட்டு மேற்கொள்ளப்படும் எனவும் பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது

## தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை சந்தித்த அண்ணாமலை



(யாழ்கீதன்)

பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநில தலைவர் அண்ணாமலை தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை இன்றைய தினம் சந்தித்தார்.


02 ஆம் பக்கத்தில்...

## மட்டு. அழகியற் கற்கை விடுதியில் இருந்து மாணவர்கள் நீதிமன்ற உத்தரவையடுத்து வெளியேறினர்

(மட்டுநிருபர்)

மட்டக்களப்பு கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நிறுவகத்தின் மாணவர் ஒன்றிய தலைவர் வி. சுரேந்திரன் மற்றும் பிரபாத் ஆகியோருடன் இணைந்த அனைத்து மாணவர்களும் விடுதியில் இருந்து நேற்று திங்கட்கிழமை

02 ஆம் பக்கத்தில்...




MATHE BILDUNGSZENTRUM

கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை

பள்ளித் தலைமனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN

076 431 83 79

mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல

Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung

BMS, HMS, FMS, Gymi Probe

அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்

Oerlikon, Uster, Schaffhausen



"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH

Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt

CEO

Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302

Fachmann für versicherung & vorsorge

Hauptstrasse 54

6015 Luzern

Switzerland

079 8000 100


arulnages@yahoo.com



finma :34598

25605: cicero


## மகன் மருமகன் பேரனை தேடியலைந்த தாய் மரணம்!



வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்ட தனது மகன், மருமகன், பேரன் ஆகிய மூவரை தேடிவந்த தாய் ஒருவர் சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

இவர் நேற்று முன்தினம் இரவு

02 ஆம் பக்கத்தில்...

## மினி பட்ஜெட்டை கொண்டு வருகின்றது அரசாங்கம்

02 ஆம் பக்கத்தில்...

# யார் புதிய பிரதமராக வந்தாலும் எந்தவித மாற்றமும் ஏற்படப் போவதில்லை

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையற்ற நிலையில் யார் புதிய பிரதமராக வந்தாலும் நாட்டில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படப் போவதில்லை என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ சுமந்திரன் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் அவர் நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது யார் பிரதமராக வந்தால் நாட்டில் மாற்றம் ஏற்படலாம் என நீங்கள் கருதுகிறீர்கள் என ஊடகவியலாளர் கேள்வியெழுப்பியபோதே இவ்வாறு தெரிவித்தார்.



மேலும் தெரிவிக்கையில், நாட்டில் தற்பொழுது அரசியல் ஸ்திரத்தன்மையற்ற நிலை காணப்படுகின்றது. பிரதமரை மாற்ற வேண்டும் என்று ஒரு குழு விடாப்பிடியாக நிற்கின்றார்கள். எதிர்க்கட்சி நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை கொண்டுவருவதற்கு தீர்மானித்துள்ளது.

தற்போதைய பிரதமர் பதவி விலகினால் புதியவர் பிரதமராக வருவார். அவருடன் ஒரு புதிய அமைச்சரவை உருவாகும். அந்த அமைச்சரவையை உருவாக்குவதற்கு ஐவர் கொண்ட குழுவினை உருவாக்கியுள்ளார்கள்.

அந்த ஐவர் கொண்ட குழுவில் உள்ளோரில் எமக்கு திருப்தியில்லை. அவ்வாறான நிலையில் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வருவதன் மூலம் நாட்டில் எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை.

ஜனாதிபதி நாட்டின் தலைவர். அவர் அவ்வாறே இருப்பார். அதேபோல பிரதமர் பதவி விலகினால் இன்னொரு பிரதமர் வருவார். அவருடன் இணைந்து புதிய அமைச்சரவை உருவாகும். அவ்வாறு உருவாகும் அமைச்சரவை தற்போதுள்ள அமைச்சரவையை விட மிகவும் கொடூரமான அமைச்சரவையாக இருக்குமாக இருந்தால் எவ்வாறு இருக்கும் என ஆழமாக பார்க்கவேண்டும்.

எனவே நாட்டில் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வந்து நாட்டின் நிறைவேற்று ஜனாதிபதி முறையினை ஒழிப்பதன் மூலமே நாட்டில் ஏதாவது மாற்றம் ஏற்படும். இந்த நாட்டில் எவர் பிரதமர் பதவிக்கு வந்தாலும் எந்தவித மான மாற்றங்களும் ஏற்படப் போவதில்லை.

அத்தோடு நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு கூட்டமைப்பு எதிராக வாக்களிக்க வேண்டிய நிலையில் உள்ளோம். எனினும் அந்த விடயம் தொடர்பில் நாங்கள் அனைத்து கட்சிகளுடனும் ஆராய்ந்து முதல்கட்டமாக ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வருவதற்குரிய நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளோம் என்றார்.

மேலும் தற்பொழுது இலங்கையில் உள்ள பொருளாதார நெருக்கடி நிலையைக் கடந்து புலம்பெயர்ந்த தேசத்தில் உள்ள தமது உறவுகள் இலங்கை மக்களுக்கு உதவிகளை வழங்க முன்வர வேண்டும் என்றார்.

# இஸ்லாமிய சமூகத்தினருக்கு பிரதமரின் ரமழான் தின வாழ்த்துச் செய்தி

(வாஸ் கூஞ்ஞ)

முழு நாடும் சவால்மிக்கதோர் காலகட்டத்திலுள்ள இத்தருணத்தில் சமூகத்தில் உள்ள பிறர் குறித்த உணர்வுடன் தியாக மனப்பாங்குடன் செயற்படுமாறு நான் உங்கள் அனைவரிடமும் கேட்டுக் கொள்கிறேன் என ரமழான் தின வாழ்த்துச் செய்தியில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதும் பரந்து வாழும் இஸ்லாமியர்களுடன் இணைந்து ஈத்-உல்-ஃபித்ர் பெருநாளைக் கொண்டாடும் இலங்கையிலுள்ள அனைத்து இஸ்லாமிய சமூகத்தினருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இஸ்லாம் நாட்காட்டியின் மிக முக்கியமான மாதத்தில் உங்கள் வாழ்க்கையைப் புரிந்து கொள்வதற்காக உலக வாழ்க்கையிலிருந்து சற்று ஒதுங்கி ஆன்மீக சடங்கு முறைகளை நிறைவேற்றுவது ஒரு சிறந்த பணியாகும்.

அதற்காக இந்த ரமழான் நோன்பு காலத்தில் நீங்கள் அனைவரும் நற்செயல்களில் மாத்திரம் கவனம் செலுத்துவது பாராட்டுக்குரிய விடயமாகும்.

பட்டினியால் வாடும் ஒருவரின் வலியைப் புரிந்து கொள்வதும் தியாக வாழ்வின் மதிப்பை உணர்வதும் இந்த நோன்பு காலத்தில் நீங்கள் பெறும் விலைமதிப்பற்ற வாழ்க்கை மதிப்புகளாகும்.



அல் குர்ஆனின் கூற்றுக்கு அமைய ரமழான் நோன்புடன் தொடர்புடைய உன்னத நற்பண்புகளைப் பின்பற்றி அந்த நோன்பு காலத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்த உங்களுக்கு அதன் ஆன்மீக சாரத்தை சமூகமயமாக்குவதற்கான சந்தர்ப்பம் தற்போது உதயமாகியுள்ளது என்பது எனது நம்பிக்கை.

முழு நாடும் சவால்மிக்கதோர் காலகட்டத்திலுள்ள இத்தருணத்தில் சமூகத்தில் உள்ள பிறர் குறித்த உணர்வுடன் தியாக மனப்பாங்குடன் செயற்படுமாறு நான் உங்கள் அனைவரிடமும் கேட்டுக் கொள்கிறேன்.

உங்கள் அனைவருக்கும் அல்லாஹ்வின் ஆசீர்வாதம் நிறைந்த இனிய ஈத்-உல்-ஃபித்ர் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

# மினி பட்ஜெட்டை கொண்டு வருகின்றது..

ஜூன் முதல் ஒகஸ்ட் வரைக்குமான சிறிய வரவு செலவுத்திட்டம் அல்லது இடைக்கால கணக்கறிக்கை இம்மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த விடயம் குறித்து நிதி அமைச்சர் அலி சப்ரி, மத்திய வங்கி ஆளுநர், திறைசேரி செயலாளர் மற்றும் நிதி அமைச்சின் மூத்த அதிகாரிகளுடன் கலந்துரையாடலை நடத்துவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

2022 வரவு செலவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் சிரமம் காரணமாக 2020 ஐ போன்று இடைக்கால கணக்கறிக்கை கொண்டுவர அரசாங்கம் முயற்சி செய்கின்றது. எவ்வாறாயினும், புதிய வரிவிதிப்பு முறையோ அல்லது வரிச் சீர்திருத்தங்களையோ இடைக்கால கணக்கறிக்கை மூலம் அறிமுகப்படுத்துவதற்கு வழி இல்லை என தெரிவிக்கப்படுகின்றது.

ஆகவே அமைச்சரவை மற்றும் நாடாளுமன்ற அனுமதிக்கு உட்பட்டு ஜனாதிபதியின் ஒப்புதலுடன் வரி அதிகரிப்பை நிதி அமைச்சர் முன்மொழிய முடியும்.

கொரோனா தொற்றை அடுத்து நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர், 2020 மார்ச் முதல் மே வரை மூன்று மாத காலத்திற்காக 1224 பில்லியன் ரூபாய்க்கான இடைக்கால கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இதுவும் போதாதமையை அடுத்து ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, 2020 ஜூன் முதல் ஒகஸ்ட் வரையிலான 1043 பில்லியனுக்கு மற்றொரு சிறிய வரவுசெலவுத்திட்டம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மகன் மருமகன் பேரனை தேடியலைந்த தாய் மரணம்!

உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா கிறிஸ்தவகுளம் பகுதியை சேர்ந்த செல்லையா செல்வராணி வயது 75 என்ற தாயே உயிரிழந்துள்ளார்.

இவரது மகன்- தங்கராசா தயாபரன் வயது 41 , மருமகன்- தம்பு தியாகராசா வயது 56, பேரன்- தியாகராசா மனோகரன் வயது 31 ஆகிய மூவரும் கடந்த 2008 ஆம் ஆண்டு வவுனியா செட்டிகுளத்தில் விறகுவெட்ட சென்ற போது இராணுவத்தினரால் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர்.

இவர்களைத் தேடி வவுனியாவில் கடந்த 1898 நாட்களாக முன்னெடுக்கப்பட்டு வரும் சுழற்சி முறை உணவு தவிர்ப்பு போராட்டத்திலும் குறித்த தாய் கலந்து கொண்டு தனது மகன், மருமகன், பேரன் ஆகிய மூவரையும் கண்டுபிடித்து தர போராடியிருந்தார்.

இந்நிலையில் மூவரையும் காணாமலேயே அவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை சந்தித்த..

நேற்று காலை 11.30 மணியளவில் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இரண்டு மணி நேரம் வரை இடம்பெற்ற இந்த சந்திப்பின் போது தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறீதரன், சீ.வீ.கே.சிவஞானம், த.சத்தியலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சந்திப்புக்கு பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநில தலைவர் அண்ணாமலை, இது சம்பிரதாயபூர்வமான சந்திப்பு என தெரிவித்தார்.

# தேசிய அரசாங்கம் இணக்கத்துடன் தயார்!

கலந்துரையாடலில் முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவும் கலந்துகொண்டதாக சகர காரியவசம் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்தோடு உதய கம்மன்பில மற்றும் விமல் வீரவங்ச உள்ளிட்ட உறுப்பினர்களும் இந்த விடயம் தொடர்பில் பொது நிலைப்பாட்டுக்கு வந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து செயற்படும் அனுர பிரியதர்ஷன யாப்பாவும் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இந்த பேச்சுவார்த்தையில் என்ன விடயங்கள் பற்றி பேசப்பட்டது என்பது குறித்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்ஜீவ எதிரிமான்ன ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

சில சகோதர கட்சிகள் தேசிய இணக்கப்பாட்டு அரசாங்கம் தொடர்பான எண்ணக்கருவை ஜனாதிபதியிடம் முன்வைத்திருந்தனர். இதற்கு முன்னர் மாநாயக்கர் தேரர்கள் உட்பட மரியாதைக்குரிய பௌத்த சங்க சபையினர் இவ்வாறான யோசனையை முன்வைத்திருந்தனர்.

இது சம்பந்தமாக மேலும் பல தரப்பினர் இப்படியான யோசனையை முன்வைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இது சம்பந்தமாக சகோதர கட்சிகளின் பிரதிநிதிகள், ஜனாதிபதியுடன் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பேச்சுவார்த்தை நடத்தியது.

இதன் போது தேசிய இணக்கப்பாட்டு அரசாங்கம் தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஒத்துழைப்புகளை வழங்க இணங்கியது. இது சம்பந்தமாக ஜனாதிபதி முடிவுகளை எடுக்க சந்தர்ப்பத்தை வழங்க நாங்கள் இணக்கத்தை வெளியிட்டுள்ளோம். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ச, கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம், அமைச்சர் ரமேஷ் பத்திரன, நானும் கலந்துக்கொண்டோம்.

அதேபோல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் நிமல் சிறிபால டி சில்வா, எமது கட்சியில் இருந்து சுயாதீனமாக இயங்குவதாக அறிவித்துள்ள அணியின் சார்பில் அனுர பிரியதர்ஷன யாப்பா, முன்னாள் அமைச்சர் விமல் வீரவங்ச, முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில, நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் ஆகியோரும் பேச்சுவார்த்தையில் கலந்துக்கொண்டனர். இந்த பேச்சுவார்த்தையில் கலந்துக்கொண்டவர்களில் எவரும் பசில் ராஜபக்சவுடன் ஒரே மேடையில் இருந்து அரசியலில் ஈடுபடுவது தொடர்பில் எந்த எதிர்ப்பை வெளியிடவில்லை.

தேசிய இணக்கப்பாட்டு அரசாங்கம் சம்பந்தமாக ஏனைய கட்சிகள் இதற்கு முன்னர் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளன. அது சம்பந்தமான சிறிய கலந்துரையாடலே இன்று நடைபெற்றது எனவும் எதிரிமான்ன கூறியுள்ளார்.

இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பது சம்பந்தமாக இன்று ஜனாதிபதி, நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்கும் அணியினர் மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதிநிதிகளுக்கு இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

# மட்டு. அழகியற் கற்கை விடுதியில்..

(02) இருந்து வெளிச்செல்லுமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் தடை உத்தரவு ஒன்றை பிறப்பித்து கட்டளையிட்டுள்ளது.

குறித்த பல்கலைகழகத்தில் நேற்று முதலாம் திகதியில் இருந்து எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையில் விடுதியில் இருந்து மாணவர்கள் வெளியேறுமாறு நிர்வாகம் அறிவித்த போதும் மாணவர்கள் விடுதியில் இருந்து வெளியேறாமல் இன்று திங்கட்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனை தொடர்ந்து சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி ஜ.பி. கெனடி விடுதியில் இருந்து மாணவர்கள் வெளியேறாது, மாணவ சங்க தலைவர் வி. சுரேந்திரன் மற்றும் பிரபாத் ஆகியோர் மாணவர்களை ஒருமித்து ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டுவருவதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவித்தார்.

இதனை அடுத்து காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சுமித்த நயன சிறி குறித்த பல்கலைகழக நிறுவகத்தில் நேற்று முதலாம் திகதி தொடக்கம் மறு அறிவித்தல்வரையில் நிறுவகத்தில் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அங்கு உள்ள விடுதியில் தங்கியிருக்கும் மாணவர்களை இன்று காலை 8 மணிக்கு முதல்வெளியேறுமாறு அறிவிக்கப்பட்ட நிலையில், விடுதியில் இருந்து மாணவர்கள் வெளியேறாது வெளியில் தங்கியிருக்கும் மாணவர்களை நிறுவக வளாகத்துக்குள் அழைத்து ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டுவருவதுடன் ஏதாவது குற்றச் செயலும் நடக்க வாய்ப்பு அதிகமாக இருப்பதாகவும் எனவே இதனை தடுத்து நிறுத்துவதற்காக குறித்த மாணவர் சங்க தலைவர் உட்பட அனைத்து மாணவர்களை வெளிச்செல்லுமாறு தடை உத்தரவு ஒன்றை கோரினார். இந்நிலையில் பொலிஸார் கோரியவாறு நீதவான் தடை உத்தரவு பிறப்பித்து கட்டளையிட்டார்.

இதேவேளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் இந்த நீதிமன்ற தடை உத்தரவை அடுத்து அங்கிருந்து வெளியேறியமை குறிப்பிடத்தக்கது.

# மஹிந்த பதவி விலகத் தயார்...

பதுளையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

புதிய திட்டத்தின் கீழ் இடைக்கால அரசாங்கத்தில் பிரதமர் பதவியை நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவிற்கு வழங்குவதற்கு தானும் உடன்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# செங்கலடி களுவன்கேணி கடற்கரையோரப்

என்பன எரியூட்டப்பட்டு கட்டிடங்கள் அமைக்கும் வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஏறாவூர் பகுதியைச் சேர்ந்த ஒரு சிலர் இணைந்து குறித்த காடழிப்பு நடவடிக்கை மற்றும் இயற்கை தோனாக்களை அடைப்பது அனுமதி இல்லாமல் கட்டிடங்களை அமைப்பது போன்ற நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த இடத்திற்கு ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச சபையின் உறுப்பினர் சுரேந்திரன் மற்றும் பிரதேச இளைஞர்கள் ஒன்றிணைந்து விடயம் தொடர்பாக பார்வையிட சென்றனர்.

சட்டவிரோதமான முறையில் அங்கு இடம்பெறும் செயற்பாடுகளை அவதானித்து இவர்கள் அரசியல்வாதிகள் உயர் மட்ட அரச அதிகாரிகள் போன்றவர்களை தொடர்புகொண்டு வினவியபோது இது தொடர்பாக யாருக்கும் தெரியாது எனவும் குறித்த இடத்தில் சட்டவிரோதமான முறையில் இச்செயற்பாடு இடம்பெறுவதாகவும் பிரதேச சபை உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை குறித்த இடத்தில் பயங்கரவாத செயற்பாடு ஒன்றிற்கு குறித்த வேலைத்திட்டம் இடம்பெறுவதாக பிரதேச சபை உறுப்பினர் சுரேந்திரன் சுட்டிக் காட்டியதோடு வேலைத் திட்டங்களை உடன் நிறுத்த வேண்டும் என அதிகாரிகளுக்கு தொலைபேசி மூலம் கோரிக்கை விடுத்தார்.

சம்பவ இடத்திற்கு உடன் வருகை தந்த களுவன்கேணி பிரதேசத்தின் கிராமசேவையாளர் குறித்த சட்டவிரோத வேலைத்திட்டங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாகவும் கட்டிடம் அமைத்து கொண்டிருப்பவர்களை உடனடியாக கட்டிட வேலைகளை நிறுத்தி அங்கிருந்து உடனடியாக அங்கிருந்து செல்லுமாறு பணித்து உடன் அனைவரையும் துரத்தினார்.

தொடர்ச்சியாக குறித்த பகுதிகளில் போலி ஆவணங்களை தயாரித்து இவ்வாறான சட்ட விரோத செயற்பாடுகள் இடம்பெறுவதாக குற்றம் சாட்டப்படுகிறது.



# குளியாப்பிட்டிய டிஃபெண்டர் ரக வாகனத்துக்கு தீ வைப்பு

## 14 வயது சிறுவன் உட்பட மூவர் கைது



குளியாப்பிட்டிய - மாதம்பே வீதியின் கனதுல்ல பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக 14 வயது சிறுவன் உட்பட மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த விபத்தை அடுத்து குறித்த பகுதியில் இருந்த மக்கள் டிஃபெண்டர் ரக வாகனத்துக்கு தீ வைத்துள்ளனர்.

குளியாப்பிட்டிய - மாதம்பே வீதியின் கனதுல்ல பகுதியில் உந்துருளி ஒன்றும் டிஃபெண்டர் ரக வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் உந்துருளியை செலுத்திய நபரே உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் குளியாப்பிட்டிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சிங்கங்கள் இருக்கும் இடத்தில் கர்ச்சனைகள் இருக்கும்

## பொன்சேகாவுடனான மோதல் குறித்து ஹரின்

மே தினக் கூட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாய்த் தகராறு குறித்து ஹரின் பெர்னாண்டோவை நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா கடுமையாக சாடியுள்ளார்.

பேரணியில் பேசுபவர்களின் பட்டியலை தான் அவரிடம் கோரிய நிலையில் ஹரின் பெர்னாண்டோ இவ்வாறு நடந்துகொண்டதை ஏற்றுக்கொள்ள முடியாது என கூறியுள்ளார்.

சுதந்திர சதுக்கத்தில் பேரணியை ஒழுங்குபடுத்தும் பொறுப்பை ஹரின் பெர்னாண்டோ மேற்கொண்டதாக சரத் பொன்சேகா தெரிவித்தார்.

எவ்வாறாயினும், சில நபர்களின் செல்வாக்கை அதிகரிப்பதற்காக ஹரின் பெர்னாண்டோ, பேரணியைப் பயன்படுத்தியதாக சரத் பொன்சேகா குற்றம் சாட்டினார்.

இதேவேளை குறித்த மோதல் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள ஹரின் பெர்னாண்டோ, சிங்கங்கள் இருக்கும் இடத்தில் கர்ச்சனைகள் இருக்கும் என தெரிவித்துள்ளார்.



# இடைக்கால அரசாங்கத்திற்கு மொட்டு கட்சி இணக்கம்!

சர்வக்கட்சி இடைக்கால அரசமைப்பதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் இணக்கம் தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும், அரசிலிருந்து வெளியேறி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் அணிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமை தாங்கியிருந்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் அதன் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ், தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச, செயலாளர் சாகர காரியவசம் ஆகியோரும், சுயாதீன அணிகளின் சார்பில் நிமல் சிறிபாலடி சில்வா, அநுரபிரியதர்சன யாப்பா, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில மற்றும் டிரான் அலஸ் ஆகியோரும் பங்கேற்றனர்.

இதன்போதே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையில் சர்வக்கட்சி இடைக்கால அரசமைப்பதற்கு இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

# 2 மாத கைக்குழந்தையுடன் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மேலும் 5 பேர் தமிழகத்தில் தஞ்சம்!

வவுனியாவில் இருந்து இரண்டு மாத கைக்குழந்தையுடன் ஒரே குடும்பத்தை சேர்ந்த மேலும் 5 இலங்கை தமிழர்கள் அகதிகளாக தமிழகத்திற்குச் சென்றுள்ளனர்.

இலங்கையில் இருந்து 75 இலங்கைத் தமிழர்கள் தமிழகத்திற்கு அகதிகாளாகச் சென்று மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கபட்டுள்ள நிலையில், இன்று அதிகாலை மேலும் 5 பேர் அகதிகளாகச் சென்றுள்ளனர்.

வவுனியா மாவட்டம் சிதம்பரபுரம் பகுதியை சேர்ந்த ராஜலெட்சுமி, தயாளன், லதா மற்றும் அவரது ஆறு வயது மகள் தன்ஷிகா, 2 மாத கை குழந்தை தக்சரா என ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐவரே ராமேஸ்வரம் அடுத்த சேராங்கோட்டை கடற்கரையில் வந்து இறங்கியுள்ளனர்.



தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற ராமேஸ்வரம் மரைன் பொலிஸார் இலங்கை தமிழர்களை மீட்டு மண்டபம் மரைன் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். பாதுகாப்பு வட்டார அதிகாரிகளின் விசாரணைக்குப் பின்னர் அவர்கள் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்படுவார்கள்.

தன் கணவருக்கு போதிய வருமானம் இல்லை என்றும் இதேநிலை நீடித்தால், இலங்கையில் பட்டினி சாவு ஏற்பட்டு அனைவரும் உயிரிழக்க நேரிடும் என்றும் எனவே உயிரை காப்பாற்றிக்கொள்ள இரண்டு மாத கைக் குழந்தையுடன் கடலில் ஆபத்தான பயணத்தை மேற்கொண்டு தமிழகத்திற்கு அகதிகளாக வந்ததாக இலங்கை தமிழ் பெண் லதா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார வீழ்ச்சி காரணமாக உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் உணவு பஞ்சம் ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தில் இலங்கை தமிழர்கள் இந்திய இலங்கை சர்வதேச கடல் எல்லையில் உள்ள தீவிர கண்காணிப்பையும் மீறி பைப்பர் படகுகளில் தனுஷ்கோடிக்கு அகதிகளாக சென்றவண்ணம் உள்ளனர்.

இதன்படி, கடந்த மார்ச் மாதம் 22ம் திகதி முதல் இன்று வரை 80 இலங்கைதமிழர்கள் அகதிகளாக தமிழகம் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போராட்டங்களால் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கிடைக்காது என்பதை போராட்டக்காரர்கள் புரிந்துகொள்ள வேண்டும்

போராட்டங்களால் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கிடைக்காது எனவும், அது பொருளாதார நெருக்கடியை மேலும் மோசமாக்கும் எனவும் சுற்றுலா மற்றும் பொது பாதுகாப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையை அரசாங்கத்திற்கு எதிராக போராடுபவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாக ஊடகங்களுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.



இதன்போது மேலும் உரையாற்றிய அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நாட்டின் அரசாங்கத்தை மாற்றும் செயற்பாடுகள் அரசியலமைப்பின் பிரகாரம் இடம்பெற வேண்டும்.

தற்போது சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்துள்ளது. நாட்டில் நிலவும் அமைதியின்மையே இதற்குக் காரணம். நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண சுற்றுலாத்துறையை வலுப்படுத்த வேண்டும். இந்த நாட்டிற்கு அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க வேண்டும். நாடு அமைதியாகவும் பாதுகாப்பாகவும் இருந்தால் மட்டுமே சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகிறார்கள்.

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவடையும் வரை இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவாகவே இருந்தது. யுத்தம் முடிவடைந்து நாடு அமைதியான நிலையில் இருந்தபோது, ஈஸ்டர் தாக்குதல் மற்றும் கொவிட் தொற்றுநோயால் சரிந்தது.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண உண்மையான விருப்பம் இருந்தால், நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கான வழிகளைத் தடுக்கும் வகையில் போராட்டக்காரர்கள் செயற்படக்கூடாது. எனவே, போராட்டக்காரர்கள் யதார்த்தமாகச் சிந்தித்து தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வுகாண ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

### பௌசர் உரிமையாளர்கள் சங்கம் முன்னெடுத்திருந்த

# வேலை நிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டது

தனியார் எரிபொருள் பௌசர் உரிமையாளர்கள் சங்கம் முன்னெடுத்திருந்த வேலை நிறுத்தப் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

இரண்டு மாதங்களுக்குள் கோரிக்கைகளுக்குத் தீர்வு வழங்கப்ப்டும் என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன தலைவர் உறுதியளித்துள்ளார்.

இதனை அடுத்து தனியார் பெற்றோலிய பௌசர் உரிமையாளர்கள் சங்கம் மேற்கொண்ட போராட்டம் கைவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களின் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக நாடளாவிய ரீதியில் நேற்று எரிபொருளை பெற்றுக்கொள்வதில் மக்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே போராட்டம் கைவிடப்பட்டுள்ள நிலையில் எரிபொருள் போக்குவரத்து விரைவில் இயல்பு நிலைக்கு திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# காலிமுகத்திடல் பகுதியில் போராட்டகாரர்களின் எதிர்ப்பையடுத்து வந்த வண்டியிலேயே திரும்பி சென்ற பொலிஸார்

காலிமுகத்திடல் பகுதியில் வழமைக்கு மாறாக திடீரென காவல்துறையினர் குவிக்கப்பட்டுள்ளதாக அங்கிருக்கும் எமது செய்தியாளர் தெரிவித்தார்.

இந்த நிலையில் அப்பகுதியில் பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

கண்ணீர்ப்புகை பிரயோகம் மேற்கொள்ளும் வாகனங்களுடன் அப்பகுதியில் காவல்துறையினர் குவிக்கப்பட்ட நிலையில், இதுவரையில் அமைதியான முறையில் போராட்டத்தை மேற்கொண்டு வந்த மக்கள் குழப்பமடைந்துள்ளனர்.

இதனை தொடர்ந்து அங்கு அமைதியின்மை ஏற்பட்டுள்ளதுடன், எங்களை சுடுவதற்காகவா இங்கு வந்தீர்கள், முடியுமானால் எங்களை சுட்டுத்தள்ளுங்கள் என தமது பலத்த எதிர்ப்பினை காட்டி காவல்துறையினரை அங்கிருந்து அனுப்பும் முயற்சியில் போராட்டக்காரர்கள் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் அரச தலைவர் செயலகத்திற்கு முன்பாகவும் காவல்துறையினர் பலர் பாதுகாப்பு கடமைக்காக வந்துள்ளதுடன், தற்போது போராட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தையிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

23 நாட்களாக அரச தலைவர் செயலகத்தின் நுழைவாயிலானது போராட்டக்காரர்களின் முற்றுகைக்குள் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் காலி முகத்திடலில் இடம்பெறும் போராட்டத்தை தடுக்க குவிக்கப்பட்ட கலகத்தடுப்பு காவல்துறையினர் போராட்டகாரர்களின் கடும் எதிர்ப்பையடுத்து வந்த காவல்துறை வண்டியிலையே திரும்பி சென்றனர்.

இரண்டு காவல்துறை வாகனங்களில் வந்த அவர்களை பொதுமக்கள் அமைதியான போராட்டத்திற்கு வந்ததன் நோக்கம் குறித்து கேள்வி எழுப்பியதைத் தொடர்ந்து திரும்பி சென்றனர்.

# அத்தியாவசிய பொருட்கள் கொள்வனவிற்கு இந்தியா வழங்கிய ஒரு பில்லியன் டொலரில் இரும்பு இறக்குமதி!

அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்ய இந்தியாவழங்கிய ஒரு பில்லியன் டொலரில் இரும்பை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

250 மில்லியன் டொலர்கள் செலவிடப்பட்டுள்ள நிலையில் மீதமுள்ள %50 மில்லியன் டொலர்களில் இந்தியாவில் இருந்து இரும்பு மற்றும் உருக்கை இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சந்தையில் அத்தியவசிய உணவுப் பொருட்கள், சமையல் எரிவாயு, எரிபொருள் உள்ளிட்டவற்றுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது,

இந்நிலையில் இரும்பு மற்றும் உருக்கு இறக்குமதி செய்யப்படுகின்றமை தொடர்பாக பொருளாதார நிபுணர்கள் கேள்விகளை எழுப்பியுள்ளனர். மேலும் இந்த இறக்குமதியில் பின்னணியில் அரசாங்கத்துடன் சம்பந்தப்பட்ட செல்வாக்குமிக்க வர்த்தகர் ஒருவர் இருப்பதாக கூறப்படுகிறது.



இரும்பு மற்றும் உருக்கை இறக்குமதி செய்வதற்காக வசதிகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஏற்கனவே இந்திய வங்கிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகத்தை அப்படியே வைத்திருக்கவும், நாட்டின் மிக மோசமான பொருளாதார வீழ்ச்சிக்கு மத்தியிலும் தனது வணிக நலன்களை உயிர்ப்புடன் பராமரிக்க இந்தியா இலங்கைக்கு மேலதிக கடன்களை வழங்குகிறது.

முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ பதவியில் இருந்த காலத்தில், தற்போது நடைபெற்று வரும் பல அவிருத்தித் திட்டங்களின் நிர்மாணப் பணிகளுக்குத் தேவையான உருக்கைக் கொள்வனவு செய்வதற்கு தேவையான நிதியை கடனவில் இருந்து பெறுவதற்கு பாரத ஸ்டேட் வங்கியுடன் ஆரம்பகட்ட பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன.

இலங்கைக்கு கடந்த மூன்று மாதங்களில் இந்தியா 2.4 பில்லியன் டொலர் நிதி உதவியை வழங்கியுள்ளது, இதில் 400 பில்லியன் ரிசர்வ் வங்கி நாணய பரிமாற்றம், 500 மில்லியன் கடன் மறுசீரமைப்பு மற்றும் இறக்குமதிக்கு 1.5 பில்லியன் ஆகியவை அடங்கும்.

# தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு சிலாபம் பிரதிமேயர் நன்றி தெரிவிப்பு



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இலங்கை திருநாட்டின் தமிழ் பேசும் தமிழ் - முஸ்லிம் உறவுகளுக்கு தாங்கள் காட்டும் பாசத்துக்கும் எனது உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து எழும் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன் என சிலாபம் நகரசபையின் பிரதி மேயர் சட்டத்தரணி அ.வ.சாதிக்குல் அமீன் தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பேரன்புமிகு தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களே!

முதற்கண் தங்களது பேரன்புக்கும் எமது இலங்கை திருநாட்டின் தமிழ் பேசும் தமிழ் - முஸ்லிம் உறவுகளுக்கு தாங்கள் காட்டும் பாசத்துக்கும் எனது உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து எழும் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். தமிழ் பேசும் உறவுகள் எங்கெல்லாம் இருக்கிறார்களோ அவர்களது உலகளாவிய தலைவர் தாங்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

தமிழ் பேசும் உறவுகள் சிறுபான்மையாக வாழக்கூடிய ஈழத் திருநாட்டிலே, உலகளாவிய முஸ்லிம்களால் நோற்கப்படுகின்ற புனித ரமழான் மாத நோன்பு இலங்கை வாழ் தமிழ் பேசும் முஸ்லிம் உறவுகளினாலும் நோக்கப்படுகின்றது. இக்கால கட்டத்திலே, பல்வேறு பொருளாதார நெருக்கடி, கொவிட் - 19 பின்னரான வருமான இழப்பு, அரசியல் ஸ்திரத் தன்மை இன்மை என பல்வேறு இன்னல்களை இலங்கை வாழ் மக்கள் அனுபவித்து வருகின்றமையை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

இவ்வாறான இக்கட்டான காலப்பகுதியில் புனித நோன்பை நோற்றுக் கொண்டிருக்கும் இலங்கை திருநாட்டின் இஸ்லாமிய உறவுகள் சொல்லொனாத் துயரங்களை அனுபவித்து இந்த நோன்பை நோற்றுக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களது பொருளாதார பின்னடைவுகளைக் கருத்திற்கொண்டு இஸ்லாமிய தமிழ் பேசும் மக்களுக்கு புனித ரமழான் மாதத்திற்கு உடனடியாகத் தேவைப்படுகின்ற உலர் உணவுப் பொருட்கள், புத்தாடைகள், பேரீத்தம் பழங்கள் போன்றவற்றை தாங்கள் தந்துதவுமாறு தமிழ் பேசும் முஸ்லிம் சார்பாக மிகப் பணிவுடன் வேண்டுகிறேன்.

என்னுடைய தாய் தந்தையை ஈன்றெடுத்த தமிழகத்தின் இராமநாதபுரம் மாவட்டம் அழகன்குளம் மற்றும் உச்சிப்புளி கிராமங்களில் எமது சொந்த பந்தங்களைக் கொண்டுள்ளோம். தாங்கள் உடன்பிறப்புக்களாய் இருக்கும் தமிழக உறவுகளைப் போல எம் மக்களையும் ஏற்று எமது மக்களுக்கு நிவாரண உதவிகளைத் தந்து உதவுமாறு தயவுடன் வேண்டிக்கொள்கிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதிக்கு எதிரான போராட்டத்தினை நாமே ஆரம்பித்து வைத்தோம்






தென்னிலங்கையில் மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினை கண்டு அஞ்சிய போது, மட்டக்களப்பிலுள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களே ஜனாதிபதிக்கு எதிரான போராட்டத்தினை ஆரம்பித்து வைத்தனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், இன்று காலை மரண வீடு ஒன்றிற்கு சென்றிருந்த போது தாய் ஒருவரை சந்தித்து பேசினேன். அவர் எங்கே செல்கின்றீர்கள் என என்னிடம் கேட்டார். நான் இங்கு வருகை தரவுள்ளமையினை அவரிடம் சொன்னேன். அவர் என்னிடம் அங்கே என்ன பேசப்போகின்றீர்கள் என என்னிடம் கேட்டார். பின்னர் கோட்டா கோ கோம் என கூறாதீர்கள். கோட்டா கோ ஜெயில் என கூறுகள் என சொன்னார். அது உண்மைதான்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இராஜாங்க அமைச்சர் ஒருவருக்கு அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பினை வெளியிட்டிருந்தனர். இராஜாங்க அமைச்சினை எடுத்தால் மாலை கிடக்கும் என எதிர்பார்த்த அவருக்கு மக்கள் செருப்பினை காண்பித்துள்ளனர். அங்கே செருப்பினை காண்பித்த அந்த அம்மாவின் கைகளுக்கு தங்கத்தில் காப்பு போட வேண்டும்.

எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தற்போதுதான் அரசாங்கத்திற்கு எதிராக கண்டி முதல் கொழும்பு வரையான போராட்டத்தினை முன்னெடுத்துள்ளார்.

ஆனால் நாங்கள் இந்த அரசாங்கம் வேண்டாம் என தெரிவித்து பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான போராட்டத்தினை இரண்டு வருடங்களுக்கு முன்னரே ஆரம்பித்தவர்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# விவாதத்திற்கு அழைத்த அமைச்சர் நஸீரை கிண்டல் செய்தார் ஹக்கீம்





(நூருல் ஹுதா உமர் )

முழு சமூகத்தின் அவமான சின்னமாக ஒருவர் மாறியுள்ளார் என்கின்ற வேதனை தான் எங்களுக்கு உள்ளது என முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஏறாவூரில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், இந்த ஊரை சேர்ந்த ஒருவர் அமைச்சு பதவி எடுத்துள்ள விவகாரம் மிக மோசமான விமர்சனத்திற்கான விவகாரமாக மாறியுள்ளது என்பது சர்ச்சைக்குரிய விடயம் அல்ல.

அது ஊரும் அங்கீகரிக்கின்ற விடயம் அல்ல. ஆனால், அவர் தாமாக சென்று அரசியல் தற்கொலை செய்துகொண்டுள்ளதையிட்டு அலிசாஹிர் மௌலானாவிற்கு ஆத்ம திருப்தி இருக்கும். தலைமைக்கு எதிராக தாறுமாறாக பேசிக்கொண்டு திரிகின்றவர்கள் ஏன் இவற்றை அவர்கள் பிரசன்னமாக இருந்த அரசியல் உச்சபீடத்தில் கதைக்கவில்லை என்பது தான் மிக பிரச்சினைக்குரிய விடயம்.

ஒவ்வொரு அரசியல் உச்சபீடக் கூட்டத்தின் முழுமையான அதன் பதிவுகள் இருக்கின்றன. தேவை என்றால் பதிவுகள் வெளியில் கொண்டுவரப்படும். முழு சமூகத்தின் அவமான சின்னமாக ஒருவர் மாறியுள்ளார் என்கின்ற வேதனை தான் எங்களுக்கு உள்ளது.

நடவடிக்கைகள் எடுக்கும் விவகாரத்தில் தாமதம் ஏற்பட்டாலும் நாங்கள் சரியாக செய்ய வேண்டும் என்பதற்காக தான் சற்று நேரம் எடுக்க வேண்டியிருந்தது.

இருந்தாலும் இந்த விவகாரத்தில் கராரான நடவடிக்கைகளை சரியாக எடுத்துள்ளோம். எனத் தெரிவித்துள்ளார்.

# கஞ்சிகுடிச்சாறு மீனவர்களுக்கு தோணிகள் வழங்கி வைப்பு





( காரைதீவு சகா)

அமேரிக்க அன்பு நெறி அமைப்பின் நிதி உதவியில் திருக்கோவில் கஞ்சிகுடிச்சாறு மீனவர்களுக்கு மீன்பிடி தோணிகள் வழங்கி வைக்கப்பட்டன.

திருக்கோவில் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட கஞ்சிகுடிச்சாறு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக அன்பு நெறி அமெரிக்கா எனும் அமைப்பின் நிதி அனுசரணையில் கஞ்சிகுடிச்சாறு மீனவர்களுக்கு மீன்பிடி தோணிகள் வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் திருக்கோவில் பிரதேசசெயலாளர் த.கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வானது கஞ்குடிச்சாறு மீனவர் சங்க கட்டட வளாகத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் 25மீன் பிடி தோணிகள் மீனவர்களிடம் கையளிக்கப்பட்டன.

இந் நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் மற்றும் கனடாவில் இருந்து வருகை தந்த International united Women Federation உறுப்பினர் Subanki Sivanantharajah உதவிப்பிரதேச செயலாளர் க.சதிசேகரன் அப்பகுதி கிராக சேவகர் மற்றும் அபிவிருத்தி உத்தியோத்தர், மீன் வளப்பு அபிவிருத்தி உத்தியோத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அவர்கள் மீன் பிடி தோணிகளை மீன்பிடித்தல் தொழில் செய்யும் மீனவ மக்களிடம் கையளித்தனர்.






# மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் கடமையாற்றிய 100 ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

(படுவான்பாலகன்)

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் 100ஆசிரியர்கள் வேறு வலயங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாண கல்வித்திணைக்களத்தினால் இடமாற்ற கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. 2021ம் ஆண்டிற்கான வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்திற்கு அமைய இவ்விடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கான இடமாற்றக் கடிதங்கள் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதனை மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய நிருவாகத்தினர் உரிய ஆசிரியர்களிடம் கையளித்து வருகின்றனர்.

குறித்த வலயத்தில் கடமையாற்றி வேறுவலயங்களுக்கு இடமாற்றம் பெற்றுச்செல்வதற்காக விண்ணப்பித்தவர்களுக்கே இவ்விடமாற்றக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் 18.05.2022ம் திகதி முதல் செயற்படும் வண்ணம் இவ்விடமாற்ற கடிதங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

இடமாற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு இணையாக இவ்வலயத்திற்கு, வேறு வலயங்களில் இருந்து அல்லது புதிய நியமனங்கள் மூலமாக ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும். அவ்வாறு நியமிக்கப்படாவிட்டால் மட்டக்களப்பு கல்வி வலயத்தில் உள்ள மாணவர்களின் கல்வி மிகவும் பாதிப்படையும், எனவே போதுமான ஆசிரியர் வளம் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்கு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் மட்டக்களப்பு மேற்கு கல்வி அமைப்புக்கள் விடுப்பதாக கூறினர்.

# இ.தொ.காவின் தீர்மானத்தை விமர்சித்த சுமந்திரன்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தீர்மானத்தை தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் விமர்சித்துள்ளார்.

ராஜபக்ஷ அரசாங்கத்துடனான 15ஆண்டு கால உறவு முறிந்துவிட்டதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் நேற்று தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் இது தொடர்பில் யாழப்பாணத்தில் இன்று ஊடகங்களுக்கு கருத்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் வீழ்ச்சியடையும் நிலை ஏற்பட்டுள்ளமை காரணமாகவே ஜீவன் தொண்டமான் இவ்வாறானதொரு தீரமானத்தை மேற்கொண்டுள்ளதாக குறிப்பிட்டார்.

# மடத்தடியில் சிறப்பாக நடைபெற்ற பாற்குட பவனி





(காரைதீவு சகா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மடத்தடி ஸ்ரீமீனாட்சி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகத்தை அடுத்து (29.4.2022) வெள்ளிக்கிழமை ஆன்மீக கலாச்சார பவனியும் பால்குட பவனியும் இடம்பெற்றது.

வெள்ளிக்கிழமை காலை காரைதீவு அட்டப்பள்ளம் பகுதிகளிலிருந்து புறப்பட்ட ஆன்மீக கலாச்சார நடை பவனி ஏழு மணி அளவில் மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தை வந்தடைந்தன.

ஆலயத்தின் மேற்கே கும்பாபிஷேக மன்று பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்க பீடத்தில் பவனிக்கான பால் வழங்கப்பட்டு ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஷ்வர குருக்கள் தலைமையில் அங்கிருந்து வயல்வெளி ஊடாக ஆலய தலைவர் கி.ஜெயசிறில் முன்னே பிரதான பால்குடம் சுமந்து வர பால்குட பவனி இடம்பெற்றது..

அவர்களுக்கான பால் வழங்கப்பட்டு சிவலிங்க பீடத்தில் ஊர்வலம் ஆனது நேராக ஆலயத்தை அட்டப்பள்ள அறநெறி மாணவர்களின் கோலாட்டம் காவடி சகிதம் ஆலயத்தை வந்தடைந்தன.

ஆலயத்தில் 10 மணியளவில் அம்மனுக்கு பால் சொரிந்தலுடன் விசேட பூஜையும் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஷ்வர குருக்கள் முன்னிலையில் இடம்பெற்றது.

# தாயின் 75 ஆவது பிறந்த நாளில் தனது கன்னி இலக்கிய நூலை வெளியிட்ட வைத்திய கவிஞர் கலாநிதி இரா.முரளீஸ்வரன்






(வி.ரி.சகாதேவராஜா)

பெற்ற தாய் திருமதி பாலநாகம்மா இராசரெத்தினம் அவர்களது 75ஆவது பிறந்த நாளில் தனது கன்னி இலக்கிய நூலை வெளியிட்டு வைத்து கௌரவப்படுத்திய வைத்திய கலாநிதி இரா.முரளீஸ்வரன்.

அதுமட்டுமின்றி தனது முதலாவது நூலை அனைவருக்கும் இலவசமாக அன்பளிப்பாக வழங்கிவைத்தார்.

ஆம்.கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரன் எழுதிய கன்னி இலக்கிய படைப்பான ஒரு மருத்துவரின் மருத்துவமனை நாள்கள் என்ற கவிதை நூல் வெளியீடு சனிக்கிழமை அன்று (30) மட்டக்களப்பு பிள்ளையாரடி தமிழ்ச்சங்க கலையரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மட்டக்களப்பு தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில், மட்டக்களப்பு தமிழ்ச்சங்க தலைவர் சைவப்புரவலர் வி.ரஞ்சிதமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு முன்னிலை அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத்தலைவர் பேராசிரியர் செ. யோகராசா கலந்து சிறப்பித்தார். முதன்மை அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன், கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் வைத்திய கலாநிதி.வே.விவேகானந்தராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

முன்னதாக பவளவிழாக்கண்ட நூலாசிரியரின் தாயாகிய திருமதி பாலநாகம்மா இராசரெத்தினம் அவர்களது %5வது பிறந்த தினத்தை தமிழ் சங்கத்தினர் மேடையில் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

நூலாசிரியர் அறிமுக உரையை தேசபந்து மு.செல்வராசா நிகழ்த்த நூல் வெளியீட்டு உரையை தேசமான்ய விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா நிகழ்த்தினார்.

நயவுரையை அருட்தந்தை அ.அ.நவரெத்தினம் நிகழ்த்த வாழ்த்துரைகளை டொக்டர்களான புஷ்பலதா லோகநாதன் பா.யூடி ரமேஷ் ஜெயகுமார் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

மேலும் இந்நிகழ்வின் சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி.க.கலாரஞ்சனி, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி.குண.சுகுணன் ஆகியோர் கலந்துகொண்டனர். மற்றும் இந்நூலின் முதல்பிரதியினை மட்டக்களப்பு தமிழ்ச்சங்க பொருளாளர் தேசபந்து மு.செல்வராசா பெற்றுக்கொண்டார்.

கதிரவன் த.இன்பராசாவின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்நிகழ்வில் உள்நாட்டு இறைவரித்திணைக்கள சிரேஸ்ட ஆணையாளர் சட்டத்தரணி மு. கணேசராசாவினால் வரவேற்புரையும், கலைக்கோகிலம் நாட்டியப்பள்ளியினால் வரவேற்பு நடனமும் இடம்பெற்றது. உரைகளை தொடர்ந்து ஏற்புரையை நூலாசிரியர் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் முரளீஸ்வரன் நிகழ்த்த நன்றி உரையை துணை செயலாளர் திருமதி பிரியா கருணாகரன் நிகழ்த்தினார்.

நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் நூல் இலவசமாக வழங்கப்பட்டது. அழைப்பிதழில் ?? வாழ்த்துக்கள் மட்டுமே அன்பளிப்பாக ஏற்றுக்கொள்ளப்படும் ?? என்று குறிப்பிட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

வைத்தியகலாநிதி இரா. முரளீஸ்வரன் ஒரு சிறந்த மருத்துவ நிருவாகி மட்டுமல்லாமல் ஓர் உன்னத இலக்கியப்படைப்பாளியுமாவார். 1976ல் யாழ்ப்பாணம் நெல்லியடியில் பிறந்து 1985ம் ஆண்டுகளின் பின்னர் மட்டக்களப்பில் வாழ்ந்துவரும் இவர் தனது கல்வியை மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியிலும், மருத்துவ பட்டப்படிப்பை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலும் மருத்துவ நிர்வாக முதுமானியை கொழும்பு பல்கலைக்கழகத்திலும் பெற்றுள்ளார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் மருத்துவராக 2005ம் ஆண்டிலிருந்து கடமையை தொடங்கி 2013ம் ஆண்டு கல்முனை ஆதாரவைத்தியசாலை வைத்திய அத்தியட்சகராகி தற்போதுவரை அங்கு தொடர்ந்து பணிபுரிகின்றார். மருத்துவ அனுபவங்களும் கவிதை அனுபவமும் இணைந்த மருத்துவமனை நாள்களைப்பற்றிய கவிதைகள் சேர்ந்த கவிதைத் தொகுப்பாக இந்நூல் வெளியிடப்பட்டது.

## பனையறுப்பான் கஜமுகாவின் ஞாபகார்த்த கிண்ணத்தை கோக்கட்டிச்சோலை ஈஸ்வரா வென்றது




(படுவான்பாலகன்)

மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பனையறுப்பான் கஜமுகா விளையாட்டுக்கழகம் நடாத்திய உறவுகளின் ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் கொக்கட்டிச்சோலை ஈஸ்வரா அணியினர் வெற்றிவாகை சூடினர்.

சனிஇ ஞாயிறு ஆகிய இரு தினங்களில் நடைபெற்றஇ அணிக்கு %பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 34அணிகள் பங்குபற்றியிருந்தன.

இறுதிப்போட்டிக்கு கொக்கட்டிச்சோலை ஈஸ்வரா அணியினரும்இ காஞ்சிரங்குடா ஜெகன் அணியினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இறுதிப்போட்டியில் இரு அணியினரும் குறித்த நேரத்திற்குள் எவ்வித கோள்களையும் இடாததன் காரணமாகஇ தண்டனை உதைமூலம் வெற்றிதோல்வி தீர்மானிக்கப்பட்டது.

இதன்போது கொக்கட்டிச்சோலை ஈஸ்வரா அணியினர் முதலிடத்தினைப்பெற்றுக் கொண்டனர். இரண்டாம் இடத்தினை காஞ்சிரங்குடா ஜெகன் அணியினரும்இ மூன்றாம் இடத்தினை விளாவெட்டுவான் ராஜா அணியினரும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

வெற்றியீட்டிய அணியினருக்கு வெற்றிக்கிண்ணங்களும்இ பணப்பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

## மட்டு மேற்கு, காஞ்சிரங்குடாவில் இரத்தான முகாம்; விரும்பியவர்கள் வழங்க முடியும்

(படுவான்பாலகன்)

மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட காஞ்சிரங்குடா காமாட்சி வித்தியாலயத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை(05) காலை இரத்தான நிகழ்வொன்று நடைபெறவுள்ளது.

காஞ்சிரங்குடா கிராமசேவையாளர் பிரிவிற்குட்பட்ட இளைஞர்கள் ஒன்றிணைந்து இவ் இரத்ததான நிகழ்வினை ஏற்பாடு செய்துள்ளனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு குருதியை கொடையாக வழங்கவுள்ளனர்.

இதன்போது, குருதியை கொடையாக வழங்க விரும்பும் அனைவரும் அன்றைய தினம் பங்கெடுத்து வழங்க முடியும் எனவும் ஏற்பாட்டாளர்கள் குறிப்பிட்டனர்.




## போண்டுகள்சேனை கிராமத்திற்கு ராமகிருஷ்ண மினின் பாரிய உதவி!






( காரைதீவு சகா)

மட்டக்களப்பில் மிகவும் பின்தங்கிய பொண்டுகள்சேனை கிராமத்திற்கு இராமகிருஷ்ண மிஷன் பல அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஆரம்பித்து பல உதவிகளையும் செய்துள்ளது.

வங்கத்தின் சிங்கம் வீரத்துறவி சுவாமி சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தின் 125வது வருட நிறைவையொட்டி இடம் பெற்றுவரும் நிகழ்ச்சி தொடரின் ஓர் அங்கமாக இந்த உதவி வழங்கப்பட்டது .

அந்த கிராமத்துக்கு தேவையான குடிநீர் திட்டம் மற்றும் குழாய் கிணற்றுடன் கூடிய தண்ணீர் தாங்கி ,கம்பியூட்டர் ,மின் விசிறி ,நீர் வடிகட்டி தாங்கி, மாணவர்களுக்கான அப்பியாச கொப்பிகள் மற்றும் கற்றல் உபகரணங்கள் போன்றன வழங்கி வைக்கப்பட்டன.

இராமகிருஷ்ண மிஷனின் கொழும்பு தலைமையக தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தா ஜீ மஹராஜ் மற்றும் மட்டக்களப்பு மாநில ராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷயானந்த ஜீ மகராஜ்,கிரான் பிரதேச செயலக பிரதேச செயலாளர் ஆகியோர் அங்கு வருகை தந்து அவற்றை மக்களிடம் கையளித்தனர்.

அத்தோடு இந் நிகழ்வுக்கு வருகை தந்திருந்த சுவாமிகள் கலந்து கொண்ட மாணவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் சுவாமிகள் நினைவு அன்பளிப்புக்களையும் , இனிப்பும் வழங்கி ஆசீர்வாதமும் செய்தார்கள்.

மற்றும் இந்து மதம் சார்ந்த சமய நூல்களும் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டன.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

நிகழ்வில் அதிபர் நன்றி கூறுகையில்..

இந் நிகழ்வில் கலந்து சிறப்பித்து ஆசியுரை வழங்கிய இலங்கை ராமகிருஷ்ண மிசன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தஜீ , இவ் விழா தொடர்பான அறிமுகவுரை வழங்கிய மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிசன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷஜானந்தஜீ மஹராஜ் , மற்றும் இத் திட்டத்தின் கீழ் எமது பாடசாலையின் பெயரினை சிபாரிசு செய்ய முன்னிலைப்படுத்திய மட்டக்களப்பு ராமகிஷ்ண மிசன் உதவிப் பொதுமுகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜீ மஹராஜ் , பிரதம விருந்தினரான கலந்து சிறப்பித்த கிரான் பிரதேச செயலக பிரதேச செயலாளர் எஸ்..ராஜ்பாவு , கல்குடா கல்வி வலயக் கல்விப்பணிப்பாளரின் பிரதிநிதியாக கலந்து கருத்துரை வழங்கிய உதவிக்கல்விப் பணிப்பாளர் ( முன்பள்ளி) எஸ். கு.ஜீவாகரன்

, இப் பிரதேச கிராமசேவை உத்தியோகத்தர், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்திச் சங்க தலைவர், மாதர் சங்கத் தலைவி, பழைய மாணவர்கள், பெற்றார் - பாதுகாவலர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

தொடர்ந்து ராமகிருஷ்ண மிஷனின் நூல் தொகுதி விநியோகமும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.





புனித நோன்புப் பெருநாள் நபிவழித் திடல் தொழுகை இன்று (02) கல்முனையில் நடைபெற்றது. இங்கு பெருநாள் தொழுகையையும் குத்பா பிரசங்கத்தையும் மௌலவி சாபித் (ஷரயி,ரியாதி) அவர்கள் நிகழ்த்து வதையும் கலந்து கொண்ட பிரதேசவாசிகளையும் படங்களில் காணலாம். **(படங்கள் - எஸ்.அஷ்ரப்கான்)**

# ஹனுமானைப் போல இலங்கையை சுமக்க மோடியும் தயார்; கோட்டகலையில் அண்ணாமலை




**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

அன்று அனுமான் எப்படி சஞ்சீவ மலையை சுமந்தாரோ அதுபோலவே இலங்கையின் பொருளாதார நெருக்கடியை சுமப்பதற்கு பாரத பிரதமர் நரேந்திர மோடியும் தயாராகவே இருக்கின்றார் என பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழ் நாட்டின் தலைவரான அண்ணாமலை தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மே தின நிகழ்வில் (1) பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது ;

தமிழ் நாட்டிலிருந்து தேயிலை தோட்டங்களில் வேலை செய்வதற்காக மக்கள் தேவைப்பட்டபோது அங்கிருந்து உங்களுடைய முன்னோர்கள் அங்கிருந்து இராமேஸ்வரம் வந்து படகு,தோணி மற்றும் கப்பல் ஊடாக இலங்கைக்கு வந்து இங்கு குடியேறினார்கள். கிட்டத்தட்ட இன்று 150 ஆண்டுகள் கழிந்தும் கூட உங்களுடைய முன்னோர்கள் எப்படிப்பட்ட கனவிலே இங்கு வந்திருப்பார்கள் என்று யோசித்திருக்கின்றேன். உலகத்துக்கே அருந்த கூடிய ஒரு பானம் தேயிலை அதற்கு அச்சாணியாக அவர்கள் திகழ்கின்றார்கள். அங்கிருந்து வந்தவர்கள் இங்கு பெரிய தலைவர்களாகவும் படித்த மேதைகளாகவும் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் பல்வேறு துறைகளில் பெருமையோடு சாதிக்கின்றார்கள். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்பது சாதாரணக் கட்சி கிடையாது.

ஆரம்பிக்கப்பட்ட அடையாளத்தை இன்னும் அக்கட்சி மறக்கவில்லை. தொழிலாளர்களை மையப்படுத்தியே அது பயணிக்கின்றது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பெருமையோடு இந்த மண்ணிலே இருக்கின்றது என்றார் இந்த கட்சியை உருவாக்கியவர்கள் சாதாரண மனிதர்கள் கிடையாது. சௌமிய மூர்த்தி தொண்டமான் இலங்கையர்களுக்கு மட்டும் அல்ல தமிழ்நாட்டில் இருந்த தமிழர்களுக்கும் வழிகாட்டியாக இருந்துள்ளார்.



குரல் அற்றவர்களின் குரலாக ஓங்கி ஒலித்துள்ளார். பேசமுடியாது கட்டுப்பட்டு நடக்க வேண்டும் உரிமை கிடையாது என்று சொன்னபொழுது இங்கு வந்து உரிமையை பறித்து முதல் பாராளுமன்ற தேர்தலில் 96 பாராளுமன்ற உறுப்பிளர்களில் 8 பாராளுமன்ற உறுப்பினர்களை இந்திய வம்சாவளி மக்கள்சார்பாக பெற்று பாராளுமன்றம் நாடாளுமன்றம் சென்றனர். அதன்பின்னர் 1948 ஆம் ஆண்டு ஒரே நாளில் ஒரே ஒரு கையெழுத்தில் குடியுரிமை மற்றும் ஏனைய உரிமைகள் பறிக்கப்பட்டு அகதிகளாக மாற்றப்பட்டபொழுது அதை எதிர்த்து குரல் கொடுத்து மறுபடியும் உரிமைகளை பெற்றுக்கொடுத்தார்.

தொழிலாளர்களின் உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்தார். தொழிலாளர்களின் உரிமைகளை மீட்டெடுத்த கட்சி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ். 1939 ம் ஆண்டு இலங்கை இந்திய காங்கிரசாக ஆரம்பிக்கப்பட்டு 1950 ம் ஆண்டு இலங்கை தொழிலாளர் காங்கிரசாக மாற்றம்பெற்றது.

இன்று 72 ஆண்டுகள் கடந்த நிலையிலும் இந்த கட்சி எதற்காக ஆரம்பிக்கப்பட்டது என்ற கேள்வி எழும்போது ஒரு தொழிலாளியின் உரிமையை மீட்டெடுப்பதற்காகவும் உங்களுடைய ஒரு சொந்தத்தை கொடுப்பதற்காகவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டது.

அமரர் ஆறுமுகன் தொண்டமானும் மக்களுக்காகவே அரசியல் செய்துள்ளார். 72 ஆண்டுகள் கடந்த நிலையிலும் இன்றும் கூட பார்க்கும்போது எண்ணத்திலிருந்து ஒரு துளி கூட மாறாமல் இருக்கின்றது. சௌமிய மூர்த்தி தொண்டமானுக்கு பின்னர் அமரர் ஆறுமுகன் தொண்டமான் சிறந்த ஆளுமை மிக்க துணிச்சலான தலைவராக திகழ்ந்தார். அவரின் இழப்பு ஈடுசெய்யமுடியாதது.

அவரை இழந்து நாம் தவிக்கின்றோம். அவர் தனது மக்களின் நில உரிமைக்காக போராடியுள்ளார். பாரத பிரதமர் நரேந்திர மோடியின் ஆட்சியின் கீழ் முழு உலகமும் இந்தியாவை திருப்பி பார்க்கின்றது. இந்தியா என்பது வல்லரசு நாடாக மாறியுள்ளது. உலகில் 5 ஆவது மிகப்பெரிய பொருளாதார பலமுடைய வல்லரசு நாடாக மாறியுள்ளது. இரஷ்யா, உக்ரைனுக்கிடையில் மோதல் ஏற்பட்டபோதுகூட உக்ரைனில் வாழ்ந்த இந்தியர்களை சிறு காயமின்றி மீட்டெடுத்த பெருமை இந்திய பிரதமர் நரேந்திரமோடியையே சாரும். அந்தவகையில் இலங்கையை அருகிலுள்ள நாடு.எமது சொந்தங்கள் வாழும் நாடு என இரு கோணத்தில் இந்தியா பார்க்கின்றது. அதனால்தான் நெருக்கடியான கட்டங்களில் உதவிகள் வழங்கப்படுகின்றன. உயிர்காப்பு மருந்து தேவை என்று சொன்னபோது 107 வகையான 760 கிலோ மருந்துகளை அனுப்பி வைத்துள்ளோம்.

எதிர்காலத்திலும் உதவுவோம். மலையக மக்களுக்கான உதவிகளும் தொடரும். நாம் வளரும் அதேவேளை, எமது தொப்புள் கொடி உறவுகளையும் வளர வைப்போம். மலையகம் கல்வியால் உயர வேண்டும். அதற்கான உதவிகளும் தொடரும். இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை நீண்டகாலத்துக்கானது அல்ல. விரைவில் நிலைமை மாற வேண்டும் என இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

இலங்கையை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுப்பதற்கு இந்தியாவும் போராடிக்கொண்டிருக்கின்றது என்றார்.

# அம்பாறை மாவட்டத்தில் நோன்பு பெருநாளை சிறப்பாக கொண்டாட மக்கள் தயார்




**(ஏ.எல்.எம்.ஷினாஸ்)**

அம்பாறை மாவட்டத்தில் இம்முறை ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளை கொண்டாடுவதற்கு மக்கள் தயாராகி வருகின்றனர். மாவட்டத்தின் கரையோர பிரதேசங்களில் உள்ள முஸ்லிம் கிராமங்களில் ஜவுளி கடைகளில் மக்கள் முண்டியடித்து பெருநாளை சிறப்பாக கொண்டாடுவதற்கு தேவையான ஆடைகளை கொள்வனவு செய்து வருகின்றனர். அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, சாய்ந்தமருது, சம்மாந்துறை, மருதமுனை போன்ற பிரதேசங்களில் அதிகளவிலான மக்கள் கடைகளில் நிறைந்து வழிகின்றனர்.

பொருட்களின் அதிக உச்ச விலை ஏற்றத்திற்கு மத்தியிலும் வீடுகளில் பலகாரங்கள் மற்றும் இதர உணவுப் பண்டங்களை தயார் செய்து மக்கள் தமது நோன்புப் பெருநாளை கொண்டாடுவதற்கு தயாராகி வருகின்றனர். கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரோனா தொற்று காரணமாக மக்கள் தமது நோன்புப் பெருநாள் கொண்டாட்டங்களை குடும்பத்தோடு மாத்திரம் மட்டுப்படுத்தி வீடுகளுக்குள் கொண்டாடி வந்தனர்.

இம்முறை மக்கள் திடல்களிலும் பள்ளிவாசல்களிலும் கூட்டாக இமாம் ஜமாஅத்தோடு பெருநாள் தொழுகையை தொழும் வாய்ப்பு முஸ்லிம் மக்களுக்கு கிடைத்துள்ளது. இதனால் முஸ்லிம் மக்கள் நீண்ட இடைவெளிக்கு பின்னர் தமது பெருநாள் தொழுகையை கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

# ஆலயத்திற்கு உதவிய அன்பர்களுக்கு மடத்தடியில் பணி நயப்புவிழா!

## இ.கி.மிசன் மட்டு.சுவாமி நீலமாதவானந்தா ஜீ பிரதம அதிதி




**(காரைதீவு குறூப் நிருபர் சகா)**

மஹா கும்பாபிசேகம் கண்ட வரலாற்றுப்பிரசித்திபெற்ற மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு பல்வேறு கோணங்களிலும் தொண்டாற்றி பணிசெய்து உதவிய அன்பர்களுக்கு ஆலய அன்னதான மண்டபத்தில் பணிநயப்புவிழா வெள்ளியன்று(29) இடம்பெற்றது.

இப்பணிநயப்பு விழா ஆலய அறங்காவலர்சபைத்தலைவர் கி.ஜெயசிறில் தலைமையில் அறங்காவலர்சபை ஆலோசகர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜாவின் நெறிப்படுத்தலில் நடைபெற்றது. விழாவிற்கு முதன்மை அதிதியாக இராமகிருஸ்ணமிசனின் மட்டு.மாநில உதவிமுகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மஹராஜ் கலந்து சிறப்பித்தார். ஆன்மீகஅதிதியாக ஆலயபிரதமகுரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் ஆசியுரை வழங்கினார்.

முதலாம்கட்ட பணிநயப்புவிழாவில் ஆலய அறங்காவலர்சபைர் மற்றும் மண்டலாபிசேகபூஜை உபயகாரர்கள் ஆகியோருக்கு இறைநேசர் என்ற பட்டம் வழங்கி பாராட்டுமடல் வழங்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து அதே அன்னதான மண்டபத்தில் அன்னதானம் இடம்பெற்றது.

இரண்டாம்கட்ட பணிநயப்புவிழா சங்காபிசேகத்தில் நடைபெறும்.அத்தருணம் ஆலய கட்டுமானப்பணிகள் மற்றும் பேருதவி புரிந்த பரோபகாரிகளுக்கு இறைபணிச்செம்மல் என்ற பட்டமும் கிரியைகளில் ஈடுபட்ட சிவாச்சாரியார்களுக்கு மீனாட்சிதுரந்தரர் என்ற பட்டமும் வழங்கி கௌரவிக்கப்படுகின்றனர்.

# சிட்னியில் 'ஒஸ்காரின்' சித்திரை கலாசார விளையாட்டுவிழா






**(காரைதீவு நிருபர் சகா)**

'ஒஸ்கார் 'அமைப்பின் 2022ம் ஆண்டுக்கான சித்திரை கலாசார விளையாட்டுவிழாவும் ஒன்றுகூடலும் கடந்த 5ஆண்டுகளுக்குப்பிற்பாடு சிட்னி நகரில் parramatta park ல் இவ்வாரம் கோலாகலமாக நடைபெற்றது.

அவுஸ்திரேலியாவில் வதியும் காரைதீவு மக்களது அமைப்பான 'ஒஸ்கார்' (AusKar) அமைப்பின் தலைவர் வீ.விவேகானந்தமூர்த்தி தலைமையில் இவ்வாண்டு அந்நிகழ்வுகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டன.

கலாசார நிகழ்வுகளில் வரிசையில் மிட்டாய் பை ஓட்டம், பலூன் காலில் கட்டி உடைத்தல் ,சாக்கு ஓட்டம் ,தேசிக்காய் ஓட்டம் , பணிஸ் உண்ணல் ,முட்டி உடைத்தல் ,சங்கீத கதிரை, கயிறிழுத்தல் முதலான சித்திரை புத்தாண்டை சிறப்பிக்கும் வகையிலான நிகழ்வுகளும் இனிதே நடைபெற்றது .வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வுகளின் இடையில், Auskar Cricket Carnival 2022 என பெயரிடப்பட்டு Auskar power Hitters( Working committee team) vs Auskar Family Stars (Family members team) இடையிலான 8 overs மட்டுப்படுத்தப்பட்ட கண்காட்சி மென் பந்து கிரிக்கெட் போட்டியொன்றும் சுவாரஸ்யமாக இடம்பெற்றது.

இதன்போது ஒஸ்கார் அறிமுகம் செய்த புதிய TShirt (Baggy Green) ஐ Auskar Family Stars அணியும், நிர்வாக உறுப்பினர்களுக்காக வடிவமைக்கப்பட்ட ( (White) T&Shirt I Auskar Power Hitters அணியும் அணிந்து போட்டியில் கலந்து கொண்டமை சிறப்பம்சமாகும். இந்த போட்டியின் சாம்பியன் மகுடத்தை Auskar power Hitters அணி சுவீகரித்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், ஒஸ்கார் குடும்ப உறவுகள் நலன்விரும்பிகள் மற்றும் நண்பர்கள் என பலரும் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தனர். அனைவருக்கும் ஒஸ்கார் நிர்வாக குழாம் இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறது என' ஒஸ்கார்'செயலாளர் அ.மகேந்திரன் தெரிவித்தார்.

# மடத்தடியில் சிறப்பாக நடைபெற்ற முப்பெரும் விழா!





வரலாற்றுப்பிரசித்திபெற்ற மடத்தடி ஸ்ரீமீனாட்சி அம்மன் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (29) முப்பெரும் விழா சிறப்பாக நடைபெற்றன.

அதிகாலையில் கலாச்சார ஆன்மீக நடைபவனியும் அதனைத் தொடர்ந்து பாற்குட பவனியும் இடம்பெற்றது.

அம்மனுக்கு சிறப்பு பாலாபிஷேகம் விசேட பூசை இடம்பெற்ற பின்னர் மூன்றாம் விழாவாக பணி நயப்புவிழா முதல் முறையாக நடைபெற்றது.

முதலாவது ஆவர்த்தன பஞ்ச குண்டமஹா கும்பாபிசேகம் கண்ட வரலாற்றுப்பிரசித்திபெற்ற மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு பல்வேறு கோணங்களிலும் தொண்டாற்றி பணிசெய்து உதவிய அன்பர்களுக்கு ஆலய அன்னதான மண்டபத்தில் பணிநயப்புவிழா வெள்ளியன்று (29) பகல் 12 மணியளவில் இடம்பெற்றது.

இப்பணிநயப்பு விழா ஆலய அறங்காவலர்சபைத்தலைவர் கி.ஜெயசிறில் தலைமையில் அறங்காவலர்சபை ஆலோசகர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜாவின் நெறிப்படுத்தலில் நடைபெற்றது.

விழாவிற்கு முதன்மை அதிதியாக இராமகிருஸ்ணமிசனின் மட்டு.மாநில உதவிமுகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மஹராஜ் கலந்து சிறப்பித்தார்.





மங்கல விளக்கேற்றலையடுத்து ஆன்மீகஅதிதியான ஆலயபிரதமகுரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் ஆசியுரை வழங்கினார்.

இராமகிருஸ்ணமிசனின் மட்டு.மாநில உதவிமுகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மஹராஜ் சிறப்பு உரையாற்றினார்.

முதலாம்கட்ட பணிநயப்புவிழாவில் ஆலய அறங்காவலர்சபைர் மற்றும் மண்டலாபிசேகபூஜை உபயகாரர்கள் ஆகியோருக்கு 'இறைநேசர்' என்ற பட்டம் வழங்கி பாராட்டுமடல் வழங்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து அதே அன்னதான மண்டபத்தில் அன்னதானம் இடம்பெற்றது.

இரண்டாம்கட்ட பணிநயப்பு விழா சங்காபிசேகத்தில் நடைபெறும்.அத்தருணம் ஆலய கட்டுமானப்பணிகள் மற்றும் பேருதவி புரிந்த பரோபகாரிகளுக்கு ''இறை பணிச்செம்மல்'' என்ற பட்டமும் கிரியைகளில் ஈடுபட்ட சிவாச்சாரியார்களுக்கு ''மீனாட்சிதுரந்தரர்'' என்ற பட்டமும் வழங்கி கௌரவிக்கப்படுகின்றனர்.

இதேவேளை அன்று வெள்ளிக்கிழமை காலை ஆன்மீக கலாச்சார பவனியும் பால்குட பவனியும் இடம்பெற்றது.

வெள்ளிக்கிழமை காலை காரைதீவு அட்டப்பள்ளம் பகுதிகளிலிருந்து புறப்பட்ட ஆன்மீக கலாச்சார நடைபவனி ஏழு மணி அளவில் மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தை வந்தடைந்தன.

ஆலயத்தின் மேற்கே கும்பாபிஷேக மன்று பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்க பீடத்தில் பவனிக்கான பால் வழங்கப்பட்டு ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஷ்வர குருக்கள் தலைமையில் அங்கிருந்து வயல்வெளி ஊடாக ஆலய தலைவர் கி.ஜெயசிறில் முன்னே பிரதான பால்குடம் சுமந்து வர பால்குட பவனி இடம்பெற்றது..

ஆயிரக்கணக்கான மக்களுக்கான பால் வழங்கப்பட்டு சிவலிங்கபீடத்தில் ஆரம்பித்த ஊர்வலம் ஆனது நேராக ஆலய நுழைவாயிலை வந்தடைந்தது.

அங்கு அட்டப்பள்ள அறநெறி மாணவர்களின் கோலாட்டம் காவடி சகிதம் ஆலயத்தை வந்தடைந்தன. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அ.உமா மகேஸ்வரனின் வழிகாட்டலில் மாவட்ட இந்து கலாச்சார உத்தியோகத்தர் கு.ஜெயராஜியின் ஏற்பாட்டில் இந்த கலாச்சார பாரம்பரிய நிகழ்வுகள் நடைபெற்றன.

ஆலயத்தில் 10 மணியளவில் அம்மனுக்கு பால் சொரிதலுடன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஷ்வர குருக்கள் முன்னிலையில் விசேட பூசையும் இடம்பெற்றது.

எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை 1008 சங்குகளுடன் சங்காபிஷேகம் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

**விபுலமாமணி**
**வி.ரி.சகாதேவராஜா**

# பொருளாதார பிரச்சினைகளை சீர்செய்ய சகல கட்சிகளுடன் இணைந்து தீர்வொன்றினை பெற்றுத்தர வேண்டும்

**(பாறுக் ஷிஹான்)**

தொழிலாளர் தினத்தை ஏனைய நாடுகள் மிக விமர்சையாக கொண்டாடிக்கொண்டு இருக்கின்ற நிலையில் எங்கள் நாட்டில் உள்ள ஊழியர்கள் மிகவும் வறுமையில் உள்ளார்கள். எனவே நாட்டின் தற்போதைய அசாதாரண சூழலை கருத்தில் கொண்டு ஒற்றுமையாக அனைவரும் தீர்வொன்றை பெற போராட வேண்டும் என கல்முனை பொதுச்சந்தை வர்த்தக சங்க செயலாளர் ஏ.எல்.கபீர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பொதுச்சந்தை வர்த்தக சங்க அலுவலகத்தில் சர்வதேச தொழிலாளர் தினம் மற்றும் மக்கள் போராட்டம் தொடர்பில் ஞாயிற்றுக்கிழமை(1) மாலை நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் தனது கருத்தில்;

சர்வதேச தொழிலாளர் தினத்தை தற்போது உலகம் பூராகவும் அனுஸ்டிக்கின்ற நிலையில் எமது நாட்டின் உள்ள நிலைமையினால் அத்தினத்தை மிக விமர்சையாக கொண்டாட முடியாததனால் நாம் கவலை அடைகின்றோம்.அந்த வகையில் எமது நாட்டின் பொருளாதார சிக்கல் மற்றும் ஸ்திரமற்ற அரசாங்கம் இது போன்ற பல சிக்கல்களுக்கு மத்தியில் இந்த ஊழியர் தினத்தை அனுஸ்டிக்கின்ற துப்பாரக்கிய நிலைக்கு இந்த நாட்டு மக்கள் தள்ளப்பட்டுள்ள நிலையை பார்க்கின்ற போது மிக வேதனையாக உள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த நாட்டில் உள்ள ஊழியர்களின் நலனில் அக்கறை கொள்ள வேண்டும்.தற்போதைய வாழ்க்கை செலவு ஊழியர்கள் மத்தியில் சிரமங்களை கொடுக்கின்றது.கல்முனை பொதுச்சந்தையானது குறைந்த ஊழியர்களை கொண்டு சிறப்பாக இயங்கிய ஒரு சந்தையாகும்.இன்று இச்சந்தை வெறிச்சோடிகாணப்படுகின்றது. எவ்வித வியாபாரங்களும் இல்லாமல் தொழிலாளர்கள் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர்.இந்த



தொழிலாளர் தினத்தை ஏனைய நாடுகள் மிக விமர்சையாக கொண்டாடிக்கொண்டு இருக்கின்ற நிலையில் எங்கள் நாட்டில் உள்ள ஊழியர்கள் மிகவும் வறுமையில் உள்ளார்கள். எனவே நாட்டின் தற்போதைய அசாதாரண சூழலை கருத்தில் கொண்டு ஒற்றுமையாக அனைவரும் தீர்வொன்றை பெற போராட வேண்டும்.

இன்று காலி முகத்திடலில் கடந்த 20 நாட்களுக்கு மேலாக இரவு பகல் பாராது மழை வெயில் என இல்லாமல் அம்மக்கள் போராட்டத்தில் படுகின்ற கஷ்டங்களை பார்க்க முடியாமல் இருக்கின்றது.ஆகவே கௌரவ ஜனாதிபதி பிரதமர் அவர்களே இந்த நாட்டின் ஊழியர்களின் நிலைமைகளை கவனத்தில் கொண்டு இந்த நாட்டில் உள்ள சகல பொருளாதார பிரச்சினைகளை சீர்செய்ய ஏனைய கட்சிகளுடன் இணைந்து தீர்வொன்றினை பெற்றுத்தர வேண்டும் என கல்முனை பொதுச்சந்தையில் இருந்து மிக வினயமாக கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் எதிர்காலத்தில் புதிய அரசாங்கம் அமைய வேண்டும் என எதிர்பார்த்தவர்களாக இருக்கின்றோம். சிங்களம் தமிழ் முஸ்லீம் என்றில்லாமல் இலங்கை மக்கள் என தற்போது ஒற்றுமையுடன் ஊழியர்கள் சகலரும் செயற்படுகின்றனர். இதற்கு கடந்த காலத்தில் கல்முனை பொதுச்சந்தையும் இதற்கு எடுத்துகாட்டாக அமைந்தமையும் சகலரும் அறிந்த விடயமாகும்.எமது கல்முனை பொதுச்சந்தையில் சுமார் 300க்கும் அதிகமான கூலித் தொழிலாளர்கள் இருக்கின்றார்கள்.இந்த கூலித் தொழிலாளர்களின் நிலைமையை நாங்கள் கருத்தில் கொண்டு கொரோனா காலகட்டத்தில் எமது வர்த்தக சங்கத்தினால் ஒரு சிறு கொடுப்பனவினை வழங்கி இருந்தோம்.அது மாத்திரமன்றி கடந்த 4 வருடங்களுக்கு முன்னர் எங்கள் சந்தையிலுள்ள மூடை தூக்கும் தொழிலாளர்களுக்கு சீருடைகளை வழங்கி இருந்தோம்.

எமது சகோதர்கள் போன்று அவ்வூழியர்களை நாங்கள் பார்த்துக் கொண்டு இருக்கின்றோம்.இந்த ஒற்றுமையான நிலைமையினை கல்முனை பொதுச்சந்தையில் மட்டுமல்லாது நாடு பூராகவும் இவ்வாறான ஒற்றுமை நிலவ வேண்டும் என இறைவனை பிரார்த்திக்கின்றோம். எனவே தான் அனைத்து ஊழியர்களும் நிம்மதியாக வாழ அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றேன் என்றார்.

மேலும் இச் செய்தியாளர் சந்திப்பில் கல்முனை பொதுச்சந்தை வர்த்தக சங்க தலைவர் ஏ.பி ஜமால்டீன் ஹாஜி மற்றும் பொருளாளர் ஐ.எல்.எம் யூசூப் ஆகியோர் இணைந்திருந்தனர்.

Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich. NAT:076 565 64 57

Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich Tel : 044 2410241
sikaramgmbh@gmail.com / www.sikaram.com Fax : 044 2410245

# நுவரேலியா காமினி தேசிய பாடசாலையில் அடிக்கல் நாட்டு வைபவம்





**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

நுவரெலியாகாமினி தேசிய பாடசாலையில் புதிய உள்ளக விளையாட்டரங்கை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் தலைமையில் பாடசாலை வளாகத்தில் நேற்று ( 2) திங்கட்கிழமை இடம்பெற்றது.

மத்திய மாகாண பூப்பந்தாட்ட சங்கத்தின் தலைவரும் முன்னாள் நுவரெலியா மாநகர முதல்வரும் தற்போதைய மாநகரசபை எதிர் கட்சி தலைவருமான மஹிந்த தொடம்பே கமகேவின் வேண்டுகோளுக்கிணங்க நுவரெலியா காமினி தேசிய பாடசாலையின் அதிபர் மற்றும் பழைய மாணவர்களின் ஒத்துழைப்புடன் புதிய உள்ளக விளையாட்டுரங்கிற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்த புதிய விளையாட்டு உள்ளரங்கு அமைப்பதற்கான நிர்மாண பணிகளுக்கான நிதியை நுவரெலியா காமினி தேசிய பாடசாலை பழைய மாணவர் சமூகமும் பெருந்தொகையான வர்த்தகர்களும் வழங்க முன்வந்திருப்பதாக முன்னாள் நுவரெலியா மாநகர முதல்வர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நுவரெலியா மேயர் சந்தனலால் கருணாரத்ன, இலங்கை பூப்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ரொஹான் டி சில்வா, நுவரெலியா வலய கல்வி பணிப்பாளர், காமினி தேசிய பாடசாலையின் அதிபர், நுவரெலியா மாநகர சபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துக் கொண்டனர்.

# பேரினவாத அடிப்படைவாத ஆளும் அதிகாரவர்க்கத்தினர் தமக்கு எதிரான மக்கள் எதிர்ப்புகளை திசை திருப்புவதற்காகக் கையாளும் அபதந்திர உத்திகள்





ஜி.ஸ்ரீநேசன்,
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், மட்டக்களப்பு

அன்றுதொட்டு இன்றுவரை பேரினவாத ஆட்சியாளர்கள் தமது சுயலாப அரசியலுக்காக இனவாத மதவாதங்களை இலவச முதலீடுகளாகப் பயன்படுத்தி வந்துள்ளார்கள்.அந்தவகையில் இன்றைய ஆட்சியாளர்கள் அந்த அபதந்திரங்களை உச்சமாகப்பயன்படுத்துகின்றனர். அந்த அபதந்திரங்கள் எவையெனப் பார்ப்போம்.

1 - தமிழர்கள் எதிர்ப்புகள் ஆர்ப்பாட்டங்களில் இறங்கினால், அதனை தமிழ் டயஸ்போராக்களின் நிதி உதவியுடன் விடுதலைப்புலிகளை மீளெழுச்சி பெறச்செய்ததற்கான தமிழ்த் தீவிரவாத நடவடிக்கையாக வியாக்கியானமளிக்கின்றார்கள்.

2-முஸ்லிங்கள் எதிர்ப்புகள், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டால் அதனை அரபு வசந்தத்தினை உருவாக்குவதற்கான இஸ்லாமியத் தீவிரவாத எழுச்சியாக விளம்பரப்படுத்துகின்றார்கள்.

3 - சிங்களவர்கள் ஆர்ப்பாட்டத்தில் குதித்தால் அதனை 1988,1989 கால ஜே.வி.பியினரின் சிங்களத் தீவிரவாதமாக விளக்கம் கொடுக்கின்றார்கள்.

அந்தவகையில்,கொழும்பு மிரிகானவில் ஜனாதிபதியின் இல்லத்தினைச் சூழ்ந்து மக்கள் நடாத்திய ஆர்ப்பாட்டத்தில் அதிகளவான முஸ்லிங்கள் கலந்து கொண்டதைத் தமக்கு சார்பாகத் திசை திருப்புவதற்காக அதனை அரபு வசந்தத்தினை இலங்கையில் ஏற்படுத்துவதற்கான ஆர்ப்பாட்டம் என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு விளக்கியது. ஆனால் மக்கள் ஏமாறவில்லை,அதனால் அந்த ஊடகப் பிரிவின் அறிக்கை பொய் என்பதை மக்களின் தொடர் போராட்டம் உறுதிப்படுத்தியது.

அதனை அடுத்து சிங்கள மக்களின் போராட்டத்தினை 1988,1989 களில் நடைபெற்ற இரத்தக்களரிக்கான புதிய போராட்டம் என்று இந்த அரசாங்கம் கூற முற்பட்டுத் தோற்றுப்போனது. இப்போது ஆட்சியாளர்களின் மாயமான மந்திர தந்திரங்கள் யாவும் பொய்த்துப்போன நிலையில் அதிகார நாற்காலிகளை விட்டு இறங்கினால் ஆபத்தாகிவிடும் என்று திணறிக் கொண்டிருக்கிறார்கள்.2009,2019 , 2020 களில் கிறோறோக்களாகப் பார்க்கப்பட்ட ராஜபக்ச குடும்பத்தினர் இன்று சீரோக்களாகி நின்று திண்டாடுகின்றனர்.நாட்டின் பொருளாதாரத்தினைக் குட்டிச்சுவராக்கிய ஆட்சியாளர்கள் பேரினவாதத்தால், கெட்டிக்காரர்களாகத் தம்மைப் பறை சாற்றினர்.

இன்று அந்தக் கெட்டித் தனத்தினை குட்டிச் சுவரை வங்குரோத்துப் பொருளாதாரம் மறைத்து விட்டது. எத்தனை நாட்கள்தான் ஏமாற்ற முடியும் இந்த நாட்டு மக்களை என்ற பட்டறிவினை இப்போதாவது ஆட்சியாளர்கள் உணர்வார்களா? என்பதுதான் மக்களின் கேள்வியாகும்.பசி வந்தால் பத்தும் பறக்கும் என்பார்கள்.அத்தியாவசியப்பொருட்கள்,எரிபொருட்களின் விலையேற்றங்கள்,மின்சாரத் துண்டிப்புகள்,வரிசைநிலை வாழ்க்கை,வருவாயற்ற செலவுகள் இவையெல்லாம் ஆட்சியாளர்களின் அடிப்படைவாத ஏமாற்று வித்தைகளை தகர்த்தெறிந்து விட்டன.

இந்த நிலையில் சகல மக்களும் சமத்தவமாக அச்சமின்றி வாழக்கூடிய அரசியல் தீர்வொன்றுதான்,இந்த நாட்டினை சமூக பொருளாதார அரசியல் கலாசார ரீதியாக அபிவிருத்தி அடையச்செய்யும்.

**சிங்கள மக்களின் போராட்டத்தினை 1988,1989 களில் நடைபெற்ற இரத்தக்களரிக்கான புதிய போராட்டம் என்று இந்த அரசாங்கம் கூற முற்பட்டுத் தோற்றுப்போனது. இப்போது ஆட்சியாளர்களின் மாயமான மந்திர தந்திரங்கள் யாவும் பொய்த்துப்போன நிலையில் அதிகார நாற்காலிகளை விட்டு இறங்கினால் ஆபத்தாகிவிடும் என்று திணறிக் கொண்டிருக்கிறார்கள். 2009,2019 , 2020 களில் கிறோறோக்களாகப் பார்க்கப்பட்ட ராஜபக்ச குடும்பத்தினர் இன்று சீரோக்களாகி நின்று திண்டாடுகின்றனர். நாட்டின் பொருளாதாரத்தினைக் குட்டிச்சுவராக்கிய ஆட்சியாளர்கள் பேரினவாதத்தால், கெட்டிக்காரர்களாகத் தம்மைப்பறை சாற்றினர்.**




இல்லையென்றால் இந்த நாடு மீளவே முடியாது. குடும்ததின் இளவரசர் முடி சூடுவதற்கு முன்பாக ஆட்சி ஆட்டம் காண்பதுதான் பிரதமரின் ஒரே கவலையாக இருக்கின்றது.


## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை - 18

# மூத்த எழுத்தாளர் கேஜரேத்தினம் தர்மகுலராசா (நிலாவேளியூர் கேஜ-தர்மா) கலைஞரின் சாதனைக் கலைப் பயணம்

**எழுத்திலக்கண முறைகளைப் பின்பற்றி பல்வேறு வகையான இலக்கிய கலை வடிவங்களை படைப்பவர்கள் எழுத்தாளர்கள் ஆவர். கருத்துக்களை நன்றாக வெளிப்படுத்தும் விதத்தில் மொழியைப் பயன்படுத்தக்கூடிய திறமையான எழுத்தாளர்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த பல்வேறு வகையான இலக்கிய வகைகளிலிருந்து தேர்வு செய்து சமூகத்துக்கு தேவையான, அவசியமான விடயங்களை தங்களது எழுத்துக்கூர்மையால் படைத்து வருகின்றனர்.**

அவ் வகையில், திருக்கோணமலை மாவட்டத்தின் நிலாவெளியினைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டு 1958ஆம் ஆண்டு கெஜரெத்தினம் இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். தனது பாடசாலைக் கல்வியினை நிலாவெளி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை, மட்டகளப்பு கல்லடி உப்போடை சிவானந்தா வித்தியாலயம், திருக்கோணமலை இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்ற இவர் குடியியல் மேன் முறையீட்டு மேல் நீதிமன்றத்தில் பதிவாளராக பணியாற்றி 2018 இல் ஓய்வு பெற்றார். தனது 14ஆவது வயதிலே கலைத்துறையில் ஈர்ப்பினைக் கொண்டவராக காணப்பட்ட இவர் தன்னை அத்துறையில் சரியான முறையில் வளர்த்துக் கொண்டு இலக்கிய உலகில் தன் எழுத்தாற்றல் மூலம் காலடி எடுத்து வைத்தார். சிறுகதை, கவிதை, நாவல், விமர்சனம் என பல் வகைப்பட்ட வடிவங்களை தனது தெளிவான, ஆழ்ந்த நிறைவான சிந்தனை கொண்ட எழுத்தாற்றல் மூலம் படைக்கத் தொடங்கினார். இதற்குச் சான்றாக 1986இல் மித்திரன் பத்திரிகையில் 'ரோஜாவைப் பறிக்காதே' எனும் முதலாவது நாவல் தொடராக வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழ் இலக்கண நெறிமுறைகளை பின்பற்றி தன் ஒவ்வொரு எழுத்திலக்கிய படைப்புக




ளையும் நேர்த்தியான முறையில் எழுதி வருகின்ற இக்கலைஞர் 2014இல் 'வைகாசி 29'என்ற கவிதைத் தொகுப்பினையும், 2018இல் ' அந்த மூன்று நாட்கள்' என்ற குறுநாவலையும் வெளியிட்டு நாடறிந்த எழுத்தாளராக அடையாளம்



காட்டியுள்ளார். தற்சமையம் சிறுகதை மஞ்சரி எனும் சஞ்சிகைக்கு தொடர்ச்சியாக தனது எழுத்தாக்க படைப்புகளை எழுதி வருகின்றமை இக் கலைஞரின் எழுத்துலகில் தணியாத தேடலின் தாகமாகும். மேலும் திருக்கோணமலையில் இடம்பெறும் கவியரங்குகளில் பங்குபற்றியும், தலைமை தாங்கியும், பலரின் புத்தக வெளியீடுகளிலும் தவறாது கலந்து கொண்டு மேடைப் பேச்சு, விமர்சனங்கள் போன்ற விடயங்களில் ஈடுபட்டு தன்னால் முடிந்த கலைச்சேவையை நம் மண்ணுக்கு ஆற்றி வருகின்றார். இவை தவிர, குச்சவெளி பிரதேச செயலகத்தின் கலாசார பேரவையின் தலைவராகவும், நிலாவெளி பொது நூலகத்தில் 'நிலாமகள்' என்ற சஞ்சிகையினை அதன் ஆசிரியராக இருந்து வளர்ந்த, வளரும் கலைஞர்களின் ஆக்கங்களுக்கு களம் அமைத்து ஊக்கம் கொடுத்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்க பதிவாகும். தனது ஓய்வூதியக் காலத்தில் கலைத்துறையில் மட்டுமன்றி விவசாயத்துறையும் கலைத் துறையே என்ற அவரது பார்வையில் உத்வேகத்துடன் அத்துறையில் களமிறங்கி பயணித்து வருகின்றார் என்பது தற்காலத்திற்கு பொருத்தமான ஒரு சமூக, ஆரோக்கியமிக்க பொறுப்புள்ள பிரவேசமாகும்.

இவ்வாறாக இலக்கியப்பணி, சமூகப்பணி, சமயப்பணி என தன்னை அர்ப்பணிப்பாக ஈடுபடுத்தி தற்பெருமை, தலைக்கனம் கொள்ளாது தனது எழுத்தாக்க படைப்புகள் மூலம் தான் பிறந்த நிலாவெளி மண்ணுக்கு மட்டுமல்லாது திருகோணமலை மாவட்டத்திற்கும் அளவில்லா புகழையும், பெருமையையும் நிலைநாட்டி இன்றுவரை கலை இலக்கியச் சேவை ஆற்றி வரும் கெஜரெத்தினம் தர்மகுலராசா கலைஞர் சுபீட்சம் நிகழ்நிலை பத்திரிகையின் 'திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை' என்ற பகுதிக்கு வழங்கிய செவ்வி காணலை இங்கு காணலாம்.

**? இலக்கியத்துறையில் உங்களுக்கு ஏற்பட்ட ஆர்வம் பற்றியும், ஆரம்பம் முதல் இன்று வரையிலான பயணம் குறித்தும்?**

எனது தந்தையார் தமிழ் ஆசிரியர். அவர் கவிதைகள், பாடல்கள் எழுதுவதோடு ஆலயங்களில் தேவாரம் பாடுவார். அதுமட்டுமன்றி கந்தபுராணம் பாடுதல், பயன் சொல்லுதல் போன்றவற்றிலும் ஈடுபடுவார். நான் எட்டாம் வகுப்புப் படிக்கும் காலத்திலேயே வீட்டில் கந்தபுராணப் புத்தகத்தின் யுத்தகாண்டப் பகுதியைத் தந்து படிக்கச் சொல்லுவார். பின்னர் நிலாவெளியில் இருக்கும் சித்திவிநாயகர் ஆலயத்திற்கு கந்தசஸ்டி விரதகாலத்தின் ஆறு நாட்களுக்கும் என்னை அழைத்துச் சென்று அங்கு இடம்பெறும் கந்தபுராணப் பாடல் நிகழ்வுகளில் பெரியவர்களோடு என்னையும் படிக்க வைப்பார். அப்பாடல்களிலே வரும் சொற்சுவை, பொருட்சுவை, சந்தம், எதுகை, மோனை என்னைக் கவர்ந்தது. அதனால் கவிதைகளைப் படிப்பதற்கான ஆர்வமும் தேடலும் அதிகரித்தது. பாரதியார், பாரதிதாசன், கண்ணதாசன், வாலி, வைரமுத்து என தேடிப் படிக்க ஆரம்பித்ததோடு இலங்கை கவிகளினது கவிதைகளையும், பழங்கால இலக்கியப் பாடல்களையும் படித்தேன். இவ்வாறான வேளையில் ஆங்கில ஆசிரியரான எனது மூத்த சகோதரன் கெ.சித்திரவேலாயுதம், நிலவூர் சித்திரவேல் எனும் புனைபெயரில் கவிதை எழுதி அவை தினசரிகளிலும் இலங்கை வானொலியில் ஒலி மஞ்சரி எனும் இலக்கிய நிகழ்சிகளிலும் ஒலி பரப்பாகின. அவற்றினை எனது பெற்றோர் , சகோதரர்கள் படித்தும் கேட்டும் மகிழ்வதோடு அவரைப் பாராட்டுவார்கள். அவ்வேளையில் நானும் இவ்வாறு எழுதி எனது வீட்டார்களின் பாராட்டைப் பெற வேண்டுமென ஆவலுற்று எழுதத் தொடங்கினேன். மேலும் நண்பன் நிலா தமிழின் தாசன் (கவிஞர்), மூத்த எழுத்தாளர் கே.ஆர்.டேவிட் , நந்தினி சேவையர் ஆகியோர்களின் தூண்டுதலும் என்னை எழுத்துலக பிரவேசத்திற்குள் நுழைய வைத்தது. இன்று வரையும் கவிதை, சிறுகதை என எழுதுவதோடு மட்டுமல்லாமல் கவியரங்குகளில் பங்கு பற்றியும் தலைமை தாங்கியும் வருகின்றேன். அதிலும் குறிப்பாக நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் தலைவர் தனபாலசிங்கம் ஆசிரியரின் தலைமையில் நடைபெறும் கவியரங்குகள் பலவற்றிலும் பங்கு பற்றி வருகின்றேன்.

**? இலக்கியத்துறையில் நீங்கள் இதுவரையில் எழுதி வெளியிட்ட நூல்கள் பற்றிய விபரம்?**




1986இல் மித்திரன் பத்திரிகையில் எனது ரோஜாவைப் பறிக்காதே எனும் முதலாவது நாவல் தொடராக வெளிவந்தது. அவ் நாவலினை புத்தகமாக வெளியிட எடுத்த நடவடிக்கை நாட்டின் போர்ச் சூழலினால் பிற்போடப்பட்டு கைவிடப்பட்டுவிட்டது. பின்னர் வைகாசி 29 என்னும் கவிதைத் தொகுப்பினை திருக்கோணமலை அம்மா பதிப்பகத்தின் ஊடாக 2014ஆம் ஆண்டில் வெளியிட்டேன். அடுத்து ''அந்த மூன்று நாட்கள் என்னும் குறு நாவலை அம்மா பதிப்பகத்தின் ஊடாக 2018 ஆம் ஆண்டில் வெளியிட்டேன்.

**? 03) நீங்கள் வாழும் நிலாவெளிப் பிரதேசத்தில் உங்கள் கலைக்கான வரவேற்பு எவ்வாறு உள்ளது?**

மிகச் சிறந்த வரவேற்பு உள்ளது.

**? ஒரு எழுத்தாளனாக புத்தகம் ஒன்றை எழுதி வெளியிடுவதில் உள்ள சவாலாக நீங்கள் நினைப்பவை ?**

ஓர் எழுத்தாளன் தனது சொந்த செலவிலேயே



தனது எழுத்தை புத்தக வடிவில் கொண்டு வர வேண்டி உள்ளது. அவ்வாறு புத்தகமாக்கியதை வெளியீடு செய்வதற்க்கான மண்டபத்திற்கும் பணம் கொடுக்க வேண்டி உள்ளது. புத்தக வெளியீட்டு விழாவிற்கு அழைப்பு விடுத்தவர்களிலும் ஐம்பது வீதமானவர்களே வருகை தருவார்கள். அவர்களிலும் முப்பது வீதமானவர்களே புத்தகம் வேண்டுவார்கள். இதனால் நாம் செலவு செய்த பணத்தில் அரைவாசியைப் பெற்றுக் கொள்வதே கடினம். செலவு செய்த பணம் முழுவதும் வருமென்றால் போதும், அடுத்த புத்தகம் ஒன்றை வெளியீடு செய்யலாம். அதற்கு முடியாமற் பல எழுத்தாளர்களின் ஆக்கங்கள் வெளி வராமல் கிடப்பில் போட்டபடி இருக்கின்றன என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

**? இன்றைய சமூகத்தில் இளைஞர்களின் இலக்கியத்துறை மீதான ஈடுபாடு எவ்வாறு உள்ளது?**

இன்று பல இளைஞர்கள் எழுதுகிறார்கள். அதிலும் குறிப்பாக முஸ்லிம் இளைஞர்கள் அதிக ஈடுபாடு காட்டுவது மகிழ்ச்சியாக உள்ளது. கவிதைத் துறையிலேயே அதிக ஈடுபாட்டைக் காட்டுகிறார்கள். தரமாகவும் எழுதுகிறார்கள்.

மிகுதி 10 ஆம் பக்கம் பார்க்க...



தொகுப்பு :-
திருமலை தட்சாயினி ஞானசங்கரன்

## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை - 16

# மூத்த எழுத்தாளர் கேஜரேத்தினம் தர்மகுலராசா (நிலாவெளியூர் கேஜ-தர்மா) கலைஞரின் சாதனைக் கலைப் பயணம்

**? இத்துறையில் நீங்கள் பெற்ற சாதனைகள், விருதுகள் குறித்து?**

கலாசார திணைக்களத்தினால் நடாத்தப்பெற்ற அகில இலங்கை ரீதியான சிறுகதைப் போட்டியில் குச்சவெளிப் பிரதேச மட்டத்தில் முதலாம் இடத்தையும், திருக்கோணமலை மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தையும், அகில இலங்கை மட்டத்தில் சிறந்த சிறுகதை பத்துக்குள் ஒன்றாகவும் எனது சிறுகதை இடம் பெற்றது. மேலும் கவிதைப் போட்டிகளிலும், கட்டுரைப் போட்டிகளிலும் பல பரிசுகளைப் பெற்றுள்ளேன். அவற்றுக்குக் கிடைத்த சான்றிதழ்கள், பரிசுகள் யாவும் 1990 இல் அகதி வாழ்க்கை வாழ தமிழ்நாடு சென்ற வேளை காணாமல் போய்விட்டது. இதனால், விருதுகளுக்கு விண்ணப்பிக்க சான்றிதழ்கள் கோரியமையால், விண்ணப்பிக்க முடியாமற் போய்விட்டது. எனது வாசகர்களின் பாராட்டுக்களையும் அவர்கள் தரும் உற்சாகத்தையுமே பெரும் விருதாய் நினைக்கின்றேன்.

**? உங்களது பிரதேசத்தில் (நிலாவெளி) கலைகளின் போக்கும், கலைஞர்களுக்கான அடையாளமும் எவ்வாறு உள்ளது?**

கலைகள் எனும் போது கவிதைத் துறையிலேயே அனேகமானோர் ஈடுபாடு காட்டுகிறார்கள். ஏனைய துறைகள் என்கின்ற போது பாடசாலை மாணவர்கள் மட்டத்திலே தான்



கலைகளுக்கான ஊக்குவிப்பும், வளர்ச்சியும் காணப்படுகின்றது. அடையாளம் எனும்போது தென்றலும் புயலும் என்கின்ற முழுநீள சினிமாப் படத்தினை எழுதி இயக்கி தயாரித்து வெளியிட்டவர் நிலவெளியைச் சேர்ந்த டாக்டர் தேவநாயகம் அவர்களே. பழைய நடிகர்களான இராசரெத்தினம், மாதவராசா, சின்னராசா ,ஜோர்ஜ் ஆகியோர்களும் கவிதைத் துறையில் நிலவிந்தாசன் ,நிலாதமிழின்தாசன் , நிலாகேகயன் ,பதுர்தீன் என்பவர்கள் ஈடுபட்டும் தங்கள் படைப்புக்களை தொகுதியாக ஆவணப்படுத்தி உள்ளமை அடையாளமாகக் கொள்ளலாம்.

**? ஒரு மூத்த கலைஞராகத் திகழும் நீங்கள் திருக்கோணமலையில் இலக்கியத் துறையிலுள்ள இடர்பாடாகக் கருதுவது?**

என்னைப் பொறுத்த வரையில், இலக்கியக் கூட்டங்களை, கலந்துரையாடல்களை, விழாக்களை நடாத்துவதற்கு இலவசமாக



மண்டபங்களைப் பெறுவது முடியாததாக உள்ளது. முன்னாள் நகரசபைத் தலைவராக இருந்த அமரர் சூரியமூர்த்தி அவர்கள் திருக்கோணமலை நகரசபை மண்டபத்தை இலக்கிய நிகழ்வுகளுக்கு இலவசமாகவே வழங்கி வந்தார் என்பதை நன்றியுணர்வுடன் நினைவு கூர்கின்றேன். இவ்வாறு இனியும் தர வேண்டுமென நகரசபையினருக்கு வேண்டுகோள் ஒன்றை அனைவரும் விடுக்க வேண்டும். அதற்கான உரிமையும் எமக்குண்டென எண்ணுகின்றேன்.

**? தற்சமையம் இலக்கியத்துறை வேலைப்பாடுகளில் ஈடுபட்டு வருகிறீர்களா? ஆம் எனில் அது குறித்தும், வருங்காலத்தில் உங்களது புத்தகப் படைப்புக்களாக வெளிவர இருப்பவை பற்றியும்?**

ஆம். கவிதை, சிறுகதை தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கின்றேன். இலண்டனில் இருந்து தமிழ் கூறும் முழு நாட்டிற்கும் கிடைக்க கூடியதாக மாதாந்தம் எழுத்தாளர் கரவை மு.தயாளனினால் வெளியிடப்படும் சிறுகதை மஞ்சரி எனும் சஞ்சிகைக்கு எழுதி வருகின்றேன். அதில் எனது தவறு எங்கே? எனும் சிறுகதை ஒன்று 2022 தை மாத இதழில் வெளிவந்தது .தொடர்ந்தும் வரும். புத்தக படைப்புக்களாக வெளியிட, மேலே நான் கூறிய ரோஜாவைப் பறிக்காதே என்கின்ற குடும்ப நாவலையும், இதுவரையில் பிரசுரமான சிறுகதைகளைத் தொகுத்து வெளியிடவும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றேன்.

**? இன்றைய காலகட்டத்தில் இலக்கியத்தின் தேவை எவ்வாறு உள்ளது?**


இன ஐக்கியத்தையும், மத நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தக்கூடிய விதத்தில் ஆக்கங்கள் எழுதப்படல் வேண்டும். அத்தோடு தற்போது பரவி வரும் போதைவஸ்து பழக்கத்தையும், எதற்கெடுத்தாலும் வாள்,கத்தி தூக்குதல் போன்ற கலாச்சாரத்தை நிறுத்த போதனை செய்யும் வகையிலான ஆக்கங்களும் வெளிவரல் வேண்டும்.

**? ஒரு எழுத்தாளனுக்கு இருக்கவேண்டிய முக்கிய பண்புகளாக நீங்கள் கருதுவது ?**

பிறரின் ஆக்கங்களையும் படிக்க வேண்டும், அதன் நிறைகுறைகளை, காழ்ப்புணர்ச்சி இன்றி அவர்களுக்கு எடுத்துரைக்கவேண்டும். ஏனைய எழுத்தாளர்களின் ஆக்கங்கள் உங்களுக்குப் பிடித்திருந்தால் அவர்களிடம் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ அதனை அவர்களுக்குத் தெரிவித்து, பாராட்டி, ஊக்கம் கொடுக்க வேண்டும். ஏனையோருக்கும் தெரிவிக்க வேண்டும். ஏனெனில் என்னைப் பொறுத்த வரையில் எழுத வேண்டும் எனும் எண்ணம், பிரசவ வலி போன்றது. அதை எழுதி முடித்த பின்பு தான் அந்த வலி தீரும். அவ்வாறு பெற்ற பிரசவத்தினை, பிறர் பாராட்டும் போது ஒரு தாய் தன் பிள்ளையைப் பிறர் பாராட்டும் போது எவ்வளவு மகிழ்ச்சி அடைகிறாளோ, அவ்வளவு மகிழ்ச்சியை எழுத்தாளன் ஒவ்வொருவரும் அடைகின்றான். மேலும் எழுத்து வேறு அவன் நடத்தை வேறு என்று இருக்கக்கூடாது. உதாரணமாக சீதனக் கொடுமைகளையும் சாதி வேறுபாட்டையும் சாடி எழுதிவிட்டு அதற்கு முரண்பாடாக சொந்த வாழ்க்கையில் நடக்கக் கூடாது என்பதே எனது கருத்தாகும்.

**? கலை மன்றங்களிலும் சமூக, சமய அமைப்புக்களிலும் உங்களது செயற்பாடு பற்றி?**

குச்சவெளி பிரதேசசபை கலாசாரப் பேரவையில் தலைவராக உள்ளேன். நிலாவெளி பொதுசன நூலகத்தின் வாசகர் வட்டத்தின் தலைவராக உள்ளேன். நிலாசனசமூகம் எனும்




சமுகப்பணி மன்றத்தின் தலைவராக உள்ளேன். அத்தோடு பொலிஸாருக்கும், மக்களுக்கும் நல் இணைப்புப் பாலமாக இருக்கும் பொலிஸ் ஜனதா கொமிட்டி எனும் அமைப்பின் தலைவராகவும் உள்ளேன். ஆலயங்களில் சமயச் சொற்பொழிவு, நிலாவெளி இந்து அறநெறிப் பாடசாலையின் போசகர் ஆகிய பணிகளையும் ஆற்றி வருகிறேன்.




**? ஈழத்தின் பாரம்பரிய கலையம்சங்களைப் பாதுகாப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளாக நீங்கள் கருதுவது ?**

எவ்விதமான கலை வடிவமானாலும் அவை ஆவணப்படுத்தப்பட வேண்டும். சிதைந்து போகும் நிலையில் உள்ள புத்தகங்கள் மீள் பிரசுரஞ் செய்யப்பட வேண்டும். ஆடல் கலைகள் வீடியோப் படுத்தப்படல் வேண்டும். நாட்டுப்புறப் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள் அம்மன் ஆலயங்களில் உடுக்கோசையுடன் பாடப்படும் அம்மன் காவியங்கள், அம்மன் தாலாட்டுப் பாடல்கள், ஆலயங்களில் பாடப்படும் ஊஞ்சற் பாடல்கள் ஒலி ,ஒளி வடிவில் பாதுகாத்து வைக்கப்படல் வேண்டும்.

**? நிறைவாக மூத்த கலைஞராக உங்களது அனுபவத்தினூடாக, சாதிக்க நினைக்கும் இளந்தலைமுறையினருக்கு கூற விரும்புவது?**

நிறையவே வாசியுங்கள், பிற மொழிகளில் வெளியான ஆக்கங்களின் மொழிபெயர்ப்பு ஆக்கங்களையும் தவறாது வாசியுங்கள், எழுத்துப் பிழையின்றி எழுதுங்கள், நீங்கள் எழுதியதைத் திரும்பத் திரும்ப படியுங்கள், எழுதியவுடனே ஊடகங்களுக்கு அனுப்ப வேண்டும் என்று, அவசரப்படாது மறுநாள் வரை பொறுத்திருந்து, மீண்டும் வாசித்து ஏதாவது திருத்த வேண்டும் என்று தோன்றினால் திருத்திவிட்டு, உங்கள் ஆக்கம் மீது உங்களுக்கே ஒரு திருப்தி வந்ததும் அனுப்புங்கள். அவ்வாறு அனுப்பியது பிரசுரமாகாவிட்டால் சோர்ந்து விடாதீர்கள் .தொடர்ந்து எழுதுங்கள் தொடர்ந்து அனுப்புங்கள் இலக்கிய உலகம் உங்களைக் கண்டுகொண்டு கொண்டாடும். அதற்குப் பல காலம் சென்றாலும் உங்களின் எழுத்துப் பயணத்தை நிறுத்தாது தொடருங்கள். எழுத்துலகில் சாதனை படைப்பீர்கள். குறிப்பாக விமர்சனத்தை ஏற்றுக்கொள்ளுங்கள் துவண்டு விடாதீர்கள். எனக் கூறிக்கொண்டு எம் போன்ற மூத்த கலைஞர்களுக்கான களத்தினை 'திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை' என்ற பகுதியின் ஊடாக வாய்ப்பளித்து வரும் சுபீட்சம் பத்திரிகைக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்வதோடு இப்பணி தொடர வாழ்த்துகின்றேன்.

நன்றி!

**இவ்வாறாக நம் திருக்கோணமலை மண்ணிற்கு தனது எழுத்து இலக்கியத் துறை மூலம் பெருமையையும் , புகழையும் பெற்றுத் தந்து இளம் கலைஞர்களையும் ஊக்குவித்து அவர்களுக்கான கலைத்துறைப் பாதையினை அமைப்பதற்கு உறுதுணையாகவும் கலைச் சேவையாற்றி வரும் இக் கலைஞர் மென்மேலும் எழுத்திலக்கியத் துறையில் பல படைப்புகளை படைப்பதற்கு நீண்ட ஆயுளையும், தேகாரோக்கியத்தையும் பெற வேண்டும் என பிரார்த்திப்பதோடு இக் கலைஞரின் கலைப் பணித் தொடர வாழ்த்துகின்றேன்.**

**தொடரும்..... கலைஞர்களுக்கான தேடலின் பயணத்தோடு**

**திருமலை தட்சாயினி ஞானசங்கரன்**



# ஒவ்வொரு நாட்டினதும் காவல் தூண்கள் பத்திரிகையே

ஜனநாயகத்தின் நான்கு பிரதான தூண்கள் என நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கம், நீதித்துறை, ஊடகங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். ஜனநாயக தூண்களில் 4 வது இடத்தில் ஊடகங்கள் வருகின்ற போதிலும், அதற்கு மேலுள்ள 3 தூண்களும் சரியாக செயற்படுகின்றனவா? என்பதைக் கண்காணித்து, அவை தொடர்பான விடயங்களினை மக்களுக்கு அறிவிக்கும் முக்கிய பொறுப்பு ஊடகங்களுக்கு உண்டு. ஊடகம் (Media) என்பது காவுவது அல்லது கடத்துவது என்று பொருள்படுகின்றது. அவ்வாறான ஊடகங்களில் பத்திரிகை மிகப் பிரதானமானதாகும்.

பத்தரிகை என்பது மனிதர்களுக்கு இடையில் தகவல்களை பரப்புகின்ற வேலையினை செய்கின்றது என்று இலகுவாக கூறலாம். மக்கள் எவ்வாறான விடயங்களில் போதிய அறிவினைப் பெறாமல் காணப்படுகின்றார்களோ அவ்வாறான விடயங்களில் அறிவினை மிகத் தொளிவாக, விரிவாக ஊட்டுபவர்களாகவும், மக்கள் நலத்திட்டங்கள் வருகின்ற வேளைகளில் அவற்றினை மக்கள் மத்தியில் கொண்டு சேர்ப்பதாகவும், மக்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளைத் தட்டிக் கேட்பவர்களாகவும், மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் பெரும்பாலும் தேர்தல் காலங்களில் மாத்திரமே நேரடிச் சந்திப்புக்கள் இடம்பெறும் அவ்வாறான நிலைமைகளைத் தவிர்த்து அவர்களுக்கு இடையிலான ஓர் இணைப்புப் பாலமாகச் செயற்படுதல் மற்றும் தேசிய, சர்வதேச நடப்புக்களை உடனுக்குடன் தெரியப்படுத்துவதும், மக்களுக்கு வேண்டிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதுமே பத்திரிகை என்று கூறலாம்.

பத்திரிகை நிறுவனங்கள், அல்லது ஊடக நிறுவனங்கள் செய்திகளை, கருத்துக்களை சுதந்திரமாக எவ்வித அச்சுறுத்தல்களும், தடைகளுமின்றி உள்ளதை உள்ளபடி மக்களுக்கு வெளியிடுவதை பத்திரிகை சுதந்திரம் எனலாம். ஐக்கிய நாடுகள் சபையால் 2022ஆம் ஆண்டிற்கான தொனிப்பொருளாக டிஜிட்டல் முற்றுகையின் கீழ் பத்திரிகை என்பது அமைகின்றது. உலக பத்திரிகை சுதந்திர நாள் என்பது பத்திரிகை சுதந்திரத்தைப் பரப்பும் நோக்கிலும், மனித உரிமைகள் சாசனம், பகுதி 19இல் இடம் பெற்றுள்ள பேச்சுரிமைக்கான சுதந்திரத்தை உலக நாடுகளின் அரசுகளுக்கு நினைவூட்டவும், ஐக்கிய நாடுகள் அவையினால் சிறப்பு நாளாகப் பிரகடனப் படுத்தப்பட்டது. 1993 ஆம் ஆண்டில் இடம் பெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி ஒவ்வோர் ஆண்டும் மே 3 ஆம் நாளன்று பத்திரிகை சுதந்திர நாளாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆபிரிக்கப் பத்திரிகைகளால் கூட்டாக 1991 ஆம் ஆண்டு இந்நாளிலேயே பத்திரிகை சுதந்திர சாசனம்' முன்வைக்கப்பட்டது. இந்த 1991ஆம் ஆண்டு யுனெஸ்கோ அமைப்பினால் நடாத்தப்பட்ட பொதுக் கூட்டத்தின் 26 ஆம் அமர்வில் சிபாரிசு செய்யப்பட்ட 'உலகின் சகல பிராந்தியங்களிற்குமான பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரத்திற்கானதும், ஊடக சுதந்திரத்தினதும் பாதுகாப்பிற்கும் மேம்படுத்தலிற்குமான ஆணை' என்ற தொனிப்பொருளில் பரிந்துரைக்கப்பட்ட கட்டளையின் நிமித்தமாக உருவானது.

பத்திரிகைகளின் பிரதான பணி என்பது செய்திகளை அல்லது செய்திக் கட்டுரைகளைச் சேகரித்தல், எழுதுதல், தொகுத்தல், வெளியிடுதல் என்பவற்றை உள்ளடக்கியதாகும். பத்திரிகைகள் நாளிதழாகவும், வார இதழாகவும், மாத இதழாவும், ஆண்டிதழாகவும் வெளிவந்த வண்ணம் இருக்கின்றது. இந்நாளில் ஊடக சுதந்திரத்திற்காகப் பங்களிப்புச் செய்யும் ஒருவருக்கு ஆண்டு தோறும் யுனெஸ்கோ நிறுவனத்தின் யுனெஸ் கோஃகிலெர்மோ கானோ உலகப் பத்திரிகை சுதந்திர விருது வழங்கி கௌரவிக்கின்றனர். இவ்விருது கொலம்பியப் பத்திரிகையாளர் கிலெர்மோ கானோ இசாசா என்பவரின் நினைவாக வழங்கப்பட்டு வருகிறது. இவர் 1986 ஆம் ஆண்டு டிசம்பர் 1% இல் அவரது அலுவலகம் முன்பாக வைத்து படுகொலை செய்யப்பட்டிருந்தார். அவரின் கொலையின் பின்னரே பத்திரிகை சுதந்திரம் தொடர்பான பேச்சு வலுப்பெற்றது.




இதன்படி பத்திரிகை சுதந்திரம் என்பதனை நோக்குமிடத்து தான் சேகரிக்கச் செல்கின்ற செய்தியினை எவ்வித தடைகளும் இன்றி, தான் பெற்றுக் கொள்ள சென்ற செய்தியினை உண்மை நிலை மாறாது அதன் படியே பெற்றுக் கொள்வதனைக் குறிக்கின்றது. மேலும் குறிப்பிட்ட விடயங்கள் சம்மந்தமாக தகவல்களை பெறுகின்ற வேளையில் எவ்விதமான இடையூறுகளையும் எதிர் கொள்ளாது செய்திகளை திரிபுபடுத்தாமல் அவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களை உண்மைத் தகவல்கள் எதுவாயினும் அதனை அவ்வாறே வழங்குவதனையே பத்திரிகை சுதந்திரம் என குறிப்பிட முடியும். சுதந்திரமாக செய்தி சேகரிப்பதற்கு சம்பவ இடங்களுக்குச் சென்று நிலவரத்தை ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட மக்களிடம் உண்மைகளை அறிவதே பத்திரிகை சுதந்திரமாகும். ஊடகவியலாளர்களின் உயிருக்கு எந்த விலை வந்தாலும், வன்செயல் நாட்டின் எந்த இடத்தில் நடந்தாலும் அங்கு சென்று உண்மையை வெளிக்கொணர்ந்து வரும் நிலையினை பத்திரிகை சுதந்திரம் எனலாம். இதன்படி பத்திரிகை சுதந்திரத்தின் பண்புகளைப் பற்றி பார்ப்போமானால்,

- ✷ஊடகவியலாளர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்.
- ✷ஊடகவியலாளர்கள் பிறரின் தனிப்பட்ட சுதந்திரத்திற்கோ அல்லது சமூகத்திற்கோ பங்கம் ஏற்படுத்தும் வகையில் நடக்காதிருத்தல்.
- ✷தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களைத் தாண்டி பொது நன்மைக்காக செயற்படல்.
- ✷விரும்பிய தகவல்களை எந்த தடையும் இன்றி பெறக்கூடியதாக இருத்தல்.
- ✷உண்மை மற்றும் துல்லியமான செய்திகளை வெளியிடல்.
- ✷சுதந்திரமாக கருத்து தெரிவிக்கின்ற உரிமை காணப்படல்.
- ✷சமூக கலாசாரங்களை பேணும் வகையில் செயற்படல்.
- ✷ஊடகத்தின் சேவையை சிவில் சமூகம் அந்த நாட்டு அரசாங்கங்கள் மற்றும் அனைத்துத் தரப்பினரும் புரிந்து கொண்டு அதற்கான ஆதரவினை வழங்குதல்.
- ✷ஊடகவியலாளர்களின் வன்முறைகளுக்கு எதிராக கடுமையான சட்டங்களை இயற்றல்.

சர்வாதிகார நாடுகளில் பத்திரிகை சுதந்திரம் பற்றிக் கூறுவதானால் பத்திரிகை சுதந்திரம் என்பதனை உதட்டினால் மட்டும் கூறிக்கொண்டு உள்ளதனால் ஒரு நாட்டின் தலைவரும், அமைச்சர்களும் அவர்களது அபிவிருத்தி செயற்பாடுகளை புகழ்ந்து பாடுவதுதான் பத்திரிகை என்று நினைக்கின்றார்கள். பத்திரிகை சுதந்திரத்திற்கு எதிராக செயற்படுகின்ற நாடுகளை சர்வாதிகார நாடுகள் என்று கூறலாம். ஜனநாயக நாடுகள் எனும் பெயரில் இருந்து கொண்டு சர்வாதிகாரத்தினை ஊடகத்துறையின் மீது செலுத்துகின்றமையினையும் நாம் காணலாம். நடுநிலையான கருத்துக்களையும், ஒரு நாட்டில் வாழும் இன்னுமொரு இனம்பட்ட அவலங்களையும், அவ்வினம் சார்ந்த பத்திரிகையாளர்கள் வெளிக்கொண்டு வரும் போது அதனை தடுப்பது பத்திரிகை சுதந்திரம் அல்ல.

பத்திரிகைகள் மீதான கட்டப்பாடுகள் அடக்குமுறைகள் அரசாங்கத்தினதும், ஆட்சியாளர்களினதும் வெறுப்புணர்வையே காட்டுகின்றன. இது ஜனநாயகத்தின் மீதான அச்சுறுத்தலின் வெளிப்பாடே ஆகும். ஊடகங்கள் அரசாங்கத்திற்கெதிரான செயற்பாட்டினை கொண்டவையல்ல. பத்திரிகை சுதந்திரம் ஜனநாயகத்தின் முக்கிய அம்சமாகும். ஜனநாயக நெறிமுறையினை மீறும் போதும், பொது மக்களினுடைய நன்மைளுக்கு விரோதமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் போதும், அவற்றை சுட்டிக்காட்டி நேர்வழியில் அரசாங்கங்களை பயணிக்க செய்யும் பாரிய பொறுப்பையே ஊடகங்கள் கொண்டிருக்கின்றன. இதனால்தான் பத்திரிகைகள் காவல் தூண்கள் என வர்ணிக்கப்படுகின்றன. அந்தவகையில் நல்லாட்சி வளர்வதற்கும், நல்லாட்சி தொடர்வதற்கும்; பத்திரிகைகள் உறுதுணையாக அமைகின்றன.




உலகத்தில் பத்திரிகை சுதந்திர தரவரிசை பட்டியலில் 180 நாடுகள் உள்ளடக்கப்படுகின்றது. ஒவ்வொரு வருடமும் பத்திரிகை சுதந்திர குறிகாட்டி வரிசை பட்டியல் வெளியிடப்படும். அந்தவகையில் கடந்த வருடம் (2021) உலக ஊடக சுதந்திர குறிகாட்டி பட்டியலில் முதல் மூன்று இடங்களில் முறையே நோர்வே, பின்லாந்து, சுவீடன் ஆகிய நாடுகள் இடம்பிடித்திருக்கின்றது. அதேபோன்று இறுதி மூன்று இடங்களில் முறையே துர்க்மெனிஸ்தான், வடகொரியா, எரித்திரியா, போன்ற நாடுகள் காணப்படுகின்றது. எமது இலங்கை நாட்டின் ஊடக சுதந்திர நிலை பற்றி பார்க்கும் போது 2021 ஊடக சுதந்திர குறிகாட்டி பட்டியலில் 127 வது இடத்தினைப் பெற்றுள்ளது. எமது நாட்டில் பத்திரிகை சுதந்திரத்தில் 2015 ஆம் ஆண்டு 165 வது இடத்தினையும், 2016, 2017 ஆம் ஆண்டுகளில் 141 வது இடத்தினையும், 2018 ஆம் ஆண்டு 131 வது இடத்தினையும், 2019 ஆம் ஆண்டு 126 வது இடத்தினையும் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்க விடயமாகும். ஆனால் 2020 மற்றும் 2021 வருடம் ஒரு படி பின்நோக்கி 127 வது இடத்தில் காணப்படுகின்றது.

1973 ஆம் ஆண்டு இலங்கை பத்திரிகை பேரவை ஆரம்பிக்கப்பட்டது. அதுமட்டுமல்லாது பத்திரிகை பதிவு செய்தல் முக்கிய விடயமாக அமைந்ததோடு பத்திரிகைகளின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பத்திரிகை சுதந்திரம் என்பது ஊடகங்களுக்கு மிரட்டலும், தணிக்கையும் இல்லாமல் தகவலை வெளியிடுவதற்கான சுதந்திரமாகும். பத்திரிகை ஊடகம் சமூகத்தின் முக்கிய அங்கமாக கருதப்படுகின்றது. இலங்கையை பொருத்தவரை சுதந்திரமாக செய்திகள் சேகரிப்பதற்கும் சம்பவ இடங்களுக்குச் சென்று உண்மை நிலவரத்தை ஆய்வு செய்யவும் பாதிக்கப்பட்ட மக்களுக்களிடம் உண்மைகளைக் கண்டறியக் கூடிய ஒரு சூழல் காணப்படுகின்றது. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் இலங்கையில் வெளியாகும் பத்திரிகைகளின் செய்திகளின் உண்மைத் தன்மை அதிகமாகப் பேணப்படுகின்றது. எவ்வாறாயினும் இலங்கையில் பத்திரிகை சுதந்திரம் என்பது பக்கச்சார்பின்றிய தன்மையில் காணப்படுகின்றமை முக்கியமான அம்சமாகும். இலங்கையில் அத்துடன் ஆரம்ப காலங்களில் எமது நாட்டில் பத்திரிகை துறையினர் மீது கொலை மிரட்டல், கடத்தல் நிகழ்வுகள் அரங்கேறியிருக்கின்றன. ஆனால் தற்போது பத்திரிகையாளர்களுக்கு தனியான இடம் வழங்கப்பட்டிருக்கின்றமை வரவேற்கத்தக்கதாகும்.

எனவே ஜனநாயகத்தின் பண்பு நிலைப்பாட்டில் உணர்ந்த முக்கியமான அந்தஸ்தை பெற்றுள்ள ஊடகமான பத்திரிகைகள் அரசாங்கத்தின் செயற்பாடுகள் அனைத்தினையும் போற்றி புகழ வேண்டும் என்பது தவறு. அரசாங்கத்தின் செயற்பாடுகள் அனைத்தும் சரியானவை என்று மக்களிடம் கொண்டு சேர்க்கும் கருவியாக பத்திரிகைகள் செயற்பட முடியாது. ஜனநாயகத்தையும் ஜனநாயக உரிமைகளையும் பேணிபாதுகாக்கின்ற பணியில் பத்திரிகைகளின் பங்கு இன்றியமையாதது. ஆட்சியாளர்களும் சரி, அரசியல்வாதிகளும் சரி ஜனநாயக செந்நெறிகளில் இருந்து நெறிபுரள்வதற்கான சந்தர்ப்பங்கள் அதிமாகவே இருக்கின்றன. ஜனநாயக இலக்கில் இருந்து வழிதவறி செல்வதற்கு அதிகார அந்தஸ்து, புகழ், பிரபல்யம், செல்வம் என்பன ஊன்றுகோலாக அமைகின்றன. இவற்றின் ஆதிக்கத்தில் இருந்து தப்பி செயற்படுவதற்கு உண்மையயான ஜனநாயக தன்மை கொண்ட ஊடக செயற்பாடுகள் உறுதுணையாக இருக்கின்றன. ஆகவே பத்திரிகை ஊடகமானது அரசிற்கும், ஆட்சியாளர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் வழிநடத்தல் காவலர்களாக திகழ்கின்றன. இத்தகைய முக்கியத்துவம் மிக்க பத்திரிகை சுதந்திரமாக செயற்பட விடவேண்டியதும், அந்த சுதந்திரத்தினை பாதுகாத்து பேணுவதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும். இந்த பொறுப்பில் இருந்து அரசாங்கம் தவறுமானால் அந்த ஆட்சி நல்லாட்சியாக அமைய முடியாது. அதுமட்டுமல்ல அந்த ஆட்சி உண்மையான ஜனநாயக ஆட்சியாகவும் இருக்க முடியாது




**பஞ்சாட்சரம் ஜோன் டிலக்ஷன்**
சமூகவியல் மற்றும் மானிடவியல் சிறப்புக்கற்கை,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

இலங்கை தினசரி மற்றும் வாரந்த பத்திரிகைகளை உங்கள் மொபைலில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்

Viber இல் இணைய இங்கே CLICK செய்யுங்கள்

Viber




இக் குழுமத்தில் இணைவதனால் மற்றவர்கள் உங்கள் தொலைபேசி இலக்கத்தை பார்வையிட முடியாது

CLICK

